Free Circulation Germany- England
மணி: 71 - ஓசை: 303 மார்கழி. December. 2021

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
27TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A




## ஆமை புகுந்த வீடும், இனவாதம் பிடித்த நாடும்

ஜூட் பிரகாஷ்




2022
HAPPY NEW YEAR

## பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை!

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி



### நாய்ப் பாசம்

இந்த தலைப்பை வாசித்ததும் பலர் மனதில் தாய் பாசம் என்றுதான் உடன் நினைத்து கொள்வார்கள். சில சொற்கள் சேருமிடம் அவ்வளவு சக்திவாய்ந்தது. ஆனால் இங்கு நான் சொல்லவருவது நாய் மீது கொண்ட பாசம் பற்றியே.

நான் நாயைப்பிடித்து மடியில் வைத்து கொஞ்சுபவன் அல்ல. காரில் முன் சீட்டில் இருத்தி சுத்து பவனும் அல்ல. விடுமுறைக்கு செல்ல அதற்கும் ரிக்கற் எடுப்ப வனும் அல்ல. ஏன் நாய் வளர்த்தவர் ஒருவர், தனது பென்ஸ்காரை விற்றாலும் வாங்க யோசிப்பவன் நான். காலம் அதிகமாக ஆட்கள் இல்லை. நெருக்கமான உறவினர்கள் நண்பர்கள் மட்டுமே வந்திருந்தனர். கேக் வெட்டி பாட்டுப்பாடி முடிஞ்சு கேக் தீத்துவதும், அதனை உடனுக்கு உடன் படம் எடுத்து உலகெங்கும் அனுப்புவதுமாக இருந்தனர்.

உள்ளே இருந்த டாக்டர் செல்வியை காணவில்லை. பின் வாசலால் எட்டிப்பார்த்தால், நாயை மடியில் வைத்து தடவியபடி இருக்கிறா. எனது மகள் வாருங்களேன் உள்ளே என்றதும் மகனை அழைத்து நாயுடன் விட்டுவிட்டு உள்ளே வந்தா.

ஏன் வெளியில் இருக்கிறீங்கள் குளிரும் அல்லவா என்றேன். ஓம் குளிர்தான் நாய் தனிய அதுதான், நாயை விட அவர்கள் மீதே வெறுப்பாக இருந்தது. கோவத்தில் இருக்கும் நாயின் முகத்திற்கும், இப்போது உள்ள எனது முகத்திற்கும் துளியும் வேறு பாடு இல்லை.

கல கல கல கல என்று சந்திரமுகி படத்தில் நாயோடுவரும் வேட்டையன் ரஜினியானேன். நான் அவர்கள் முகம் நேருக்கு நேர் காணும் போதெல்லாம் என் முகம் வேட்டையன் போலவே வேணும் என்றே வைத்துக்கொள்வேன். ஒரு வரை வார்த்தைகள் ஏதும் இல்லாமல் தாக்குவது எப்படி என்று, என்னால் வேட்டையன் என்ற பெயரில் ஒரு யூட்ரியூப் சனலே ஆரம்பிக்க முடியும். வாங்க அங்கிள் என்றா. ஒன்றும் செய்ய முடியாது மகளுக்கு பின்னே சென்றேன். என்னை அன்போடு இரு கரம் கூப்பி வரவேற்றார்கள் செல்வியின் அம்மாவும் அவர் கணவரும். தாய் வீல்செயரில் இருந்தபடி மகள் கொடுத்த கேக்கை வாங்கினா. சொறி மருமகன் வரமுடியவில்லை நான் தனிய என்று அவர் வரவில்லை. யாரோ ஒருவர் மாறி மாறி என்னோடு நிற்பினம். என்றா.

எனக்கு நாய் தனிய என்று செல்வி நடந்தவிதம்,என்னை எப்படி எல்லாம் மாற்றியது.

நாய் என்னை மோந்து பார்க்காமல் அப்போ என்னைக் கடித்துக் குதறியிருந்தாலும் தப்பில்லை என்று






# நான் வில்லனாக இருந்த கணப்பொழுது

இருந்தாலும் நாயில் பிடித்தது அதன் நன்றியுணர்வு. பிடிக்காதது அதன் மயிர். இந்த மயிர் பிரச்சினையே எனக்கு மேலாக இருக்கிறது.

### இன்று பேரனின் பிறந்த நாள்

இப்போ பென்ஸ்காரில் ஒரு பெரிய (German shepherd dog) யேர்மன் செப்பேட் நாய் வந்து இறங்கியது. நாய்க்கு பின்னால் டாக்டர் செல்வியும் பிள்ளைகள் மகனும் மகளும் வருகிறார்கள். நாய் ஓடி வந்து என்மீது பாய்ந்து முகர்ந்தது. நான் பயந்து விலகி ஓட செல்வி நாயைப் பிடித்துக் கொண்டா. பிள்ளைகள் வீட்டுக்குள் வர, செல்வி நாயை பின்னால் சென்று கட்டிவிடச் சொல்கிறா. அவர்கள் எனது மகளின் குடும்ப நண்பர்கள்.

இது வரை அவர்களுக்காக காத்திருந்ததுபோல் அவர்கள் வந்ததும் கேக்கும் மேசைக்கு வந்தது. கொரோனா அதோடு இருந்தேன் என்றா,செல்வி. மகன் இப்ப நாயுடன் இருப்பதை திரும்பி பார்த்து உறுதிப்படுத்தியபடி கேக்கை வெட்டி தீத்தினா. கொரோனாவுக்கு கழுவிய கையை, இப்போ நாய் நக்கினது போதும், என்று மேலும் கழுவவில்லை.

நாய் தனிய இருக்கிறது என்று துணைக்கு மாறி மாறி நிற்கும் இவர்கள், பெற்ற தாய் தந்தையர் தனிய என்று எண்ணுவார்களா? எனக்கு



மாதவி

ஆனால் நான் நல்லவன் என்ற நம்பிக்கையை கெடுக்ககூடாது அல்வா. திரும்பி பார்க்கிறேன் செல்வி நாய் பிள்ளைகள் யாவரும் பைசொல்லிக்கொண்டு வீடு போகிறார்கள். பிறந்தநாள் கொண்டாட்டம் ஓய்கிறது. மகள் வராதவர் வீடுகளுக்கு கேக் பலகாரம் பக்பண்ணி கொடுப்பதற்கு ஒழுங்கு செய்கிறா.

அப்பா வாருங்கள் இவற்றைக் கொடுத்துவிட்டு வருவோம் என்றா. நானும் மகளுடன் ஒவ்வொரு வீடாகச் சென்று, நான் காரில் இருக்க மகள் கொடுத்திட்டு வந்தா.

இப்போ செல்வி வீட்டுக்கு முன்னால் கார் நிற்கிறது. நான் மகளைப் பார்த்து குலைத்தேன். என்ன விசரா அவர்கள் இப்ப வந்திட்டல்லவா போகினம். பிறகேன் அவர்களுக்கு என்றேன். சொல்லி முடியவில்லை வாசலில் செல்வி நின்று உள்ளே எண்ணத் தோன்றியது. எதுக்கு எடுத்தாலும் ஒரு மாற்றுக் கேள்வி கேட்டு கேட்டுப் பழகிப்போச்சு.

யாரும் ஊரிலை கோவிலுக்கு காசு கொடுத்தால். உந்த காசை ஏழைகளுக்கு கொடும்கலாமே என்பது. யாரும் ஏழைகளுக்கு உதவினால் இவர்கள் பவர்காட்ட என்பது. பிள்ளைகளுக்கு படிக்க உதவினால் அது பேஸ்புக்கில் படம் போட என்பது, இப்பிடியே என்வாழ்வு குதக்க கேள்விகளால் கும்மியடிக்குது.

இப்போது செல்வி வீட்டு நாய் என் மீது பாயாமல் என் காலுக்கு கீழ்வந்து குடைந்து படுக்குது. செல்வி சொல்கிறா இது யெர்மன் செப்பேட் ஒருக்கா மோந்து பார்த்தால் போதும், அவரை ஞாபகம் வைத்திருக்கும்.

இப்போ செல்வி மட்டுமல்ல யெர்மன் செப்பேட்டும் என்னை அங்கிள் என்றே அழைக்குது.





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 303



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

'ஓவியக்கலைவேள்'

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Chief Edito:

Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி'

தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd

Company No: 8876276


# பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை!


கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி


நாட்டின் தன்மைக்கு ஏற்றவாறு திட்டமிடப்படாத அரசியல் நலன்களை மட்டுமே இலக்காகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை எந்தவளவுக்கு மோசமான விளைவுகளைக் கொண்டுவரும் என்பதற்கு இலங்கை இப்போது உதாரணமாகியிருக்கின்றது. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமும் இவ்வாறான ஒன்றாகத்தான் காணப்படுகின்றது. எதிர்காலப் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதையோ அல்லது, மக்களுடைய சுமைகளைக் குறைப்பதையோ இலக்காகக்கொண்டதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருக்கவில்லை என்பது இதன் முக்கிய குறைபாடாகும்.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு மேலும் சுமைகளை அதிகரிப்பதாகவே இந்த வரவு செலவுத் திட்டம் வந்திருக்கின்றது. நிவாரணங்களை எதிர்பார்த்த மக்களுக்கு, சுமைகளே அதிகரித்திருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் நடத்தப்பட்ட எதிர்ப்புப் பேரணியில் பெருந்தொகையான மக்கள் தடைகளையும் தாண்டி கலந்துகொண்டமைக்கு அரசின் மீதான அவர்களின் அதிருப்தியே காரணம். ஆனால், இந்த அதிருப்தியை அறுவடை செய்யக்கூடியளவுக்கு ஆளுமையுள்ளவராக சஜித் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த பட்ஜெட் இவ்வாறுதான் அமையும் என்பது பொருளாதார நிபுணர்களால் ஏற்கனவே எதிர்வுகூறப்பட்டிருந்தது. ஆனால், பஸில் ராஜபக்ஷ மக்களின் சுமையைக் குறைப்பார் என்ற நம்பிக்கை ஆளுந் தரப்பினரால் முன்வைக்கப்பட்டிருந்தது. இது மக்களுக்கு ஒருவித எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், அந்த எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் புஸ்வாணமாக்கியுள்ளது பஸிலின் பட்ஜெட். கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் விலைவாசி உயர்வு, அத்தியவசியப் பொருட்களுக்குத் தொடரும் தட்டுப்பாடு என்பவற்றுடன் அதிகரித்துள்ள அரசின் கெடுபிடிகள் என்பன அரசின் மீதான அதிருப்தியை அதிகரித்திருக்கின்றது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் அனைத்துக்கும் கொரோனா பெரும் தொற்றுதான் காரணம் எனக் கூறிக்கொள்ள முனைகின்றது. இந்த நிலைமைக்கு கொரோனா ஓரளவுக்குக் காரணமாக இருந்தாலும், அதனை மட்டும் சொல்லிவிட முடியாது என்பதே



உண்மை! அதேவேளையில், அவசரம் அவசரமாக எம்.பி.யாக்கப்பட்டு நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பஸில் ராஜபக்ஷவினால் இந்த நிலைமைகளை கட்டுக்குள் கொண்டுவர முடியாது என்ற யதார்த்தத்தை மக்கள் இப்போது புரிந்துகொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையின் பொருளாதாரம் பெரும் தொற்று ஏற்படுவதற்கு முன்னரே மந்த நிலையில்தான் இருந்தது. குறிப்பாக 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நிலைமை காணப்பட்டது. அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் இதற்குக் காரணம். வருமானம் தராத துறைகளில் அரசாங்கம் பெருமளவு முதலீடுகளை நீண்ட காலமாகவே செய்துகொண்டிருந்தது. பாரிய நட்டத்தில் செயற்படும் பல அரச நிறுவனங்கள் இருக்கின்றன. இலங்கை மின்சார சபை, போக்குவரத்துச் சபை, சிறிலங்கன் எயர் லைன்ஸ் என்பன இதற்கு உதாரணமாகச் சொல்லமுடியும். இந்த நிறுவனங்கள் மூலமாக வருடாந்தம் வரும் கோடிக்கணக்கான நட்டம் மக்களின் தலைகளிலேயே சுமத்தப்படுகின்றது.

இவை தொடர்பில் அரசாங்கத்திடம் சரியான பொருளாதார முகாமைத்துவம் இருக்கவில்லை. ஆக்கபூர்வமான திட்டமிடல் இருக்கவில்லை. அதனைவிட ஊழல் மோசடிகளும் மலிந்திருந்தது. இது கொரோனாவுக்கு முன்னரே காணப்பட்ட நிலை. கொரோனாவுக்குப் பின்னர் இந்த நிலை இன்னும் மோசமடைந்திருக்கின்றது.

பெருந்தொற்றின் தாக்கத்தினால், வெளிநாட்டு வருமானம் பெருமளவுக்கு குறைந்தது. குறிப்பாக, மத்திய கிழக்கில் பணிபுரிந்த ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழந்து நாடு திரும்பினார்கள். இலங்கைக்கு அதிகளவு அந்நியச் செலவாணியைத் தேடித்தரும் துறையாக மத்திய கிழக்கு வேலைவாய்ப்புதான் இருந்தது. மேற்கு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த மக்கள் அனுப்பிவைக்கும் பணம் பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்தது. உல்லாசப் பயணத்துறை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. அதேபோல தொடர்ச்சியாக பல வாரங்கள் நாடு முடக்கப்பட்டிருந்தமையால் உள்நாட்டு வருமானத்தில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. ஏற்றுமதி செய்யப்படும் ஆடைக் கைத்தொழில் வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

ஆக, ஏற்கனவே இருந்த பொருளாதார நெருக்கடிக்கு மேலாக, உள்நாட்டு, வெளிநாட்டு வருமானங்களில் பாரிய வீழ்ச்சியை அரசாங்கம் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. குறுகிய காலத்துக்குள் இவ்விதம்

27 ஆம் பக்கம் பார்க்க...





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# HAUSÄRZTE AM KNAPPSCHAFTSKRANKENHAUS BOCHUM

## E.DÜZENLI & DR.L.RAMACHANDRAMOORTHY

-Fachärzte für Innere Medizin-





**யேர்மனியில் போஃகும் (Bochum) நகரில் தமிழரது ஒரு பிரமாண்டமான குடும்ப வைத்தியத்திற்கான மருத்துவச் சேவையும், அவர்களது நோய்களுக்கான ஆலோசனைகளும், அதற்கேற்ப வைத்தியமும் வழங்க ஓர் வைத்திய நிலையம் புதிதாக அமைந்துள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.**

உங்களது நோய்களைக் கேட்டறிந்து அதற்கான மருந்துகளைத் தருவதற்கு எம் தாய் மொழியில் உரையாடுவதை விட வேறு எது சிறந்ததாக இருக்கமுடியும்.



**தற்போதைக்கு எங்களது மருத்துவ சேவைகள் ஒரு சில கீழே தரப்பட்டுள்ளன.**

**உதாரணமாக...**

- Impfberatung
- DMP Diabetes
- DMP Asthma /COPD
- DMP KHK
- Ultraschall
- Labordiagnostik
- EKG
- Langzeit-EKG
- Langzeit Blutdruck
- Lungenfunktionsprüfung
- Check up
- Hautkrebs-Screening
- Ergometrie



### Öffnungszeiten

மருத்துவ ஆலோசனைக்கான நேரங்கள்

- Montag, Dienstag und Donnerstag
  8-12 Uhr und 14-17 Uhr
- Mittwoch und Freitag:
  8-12 Uhr

HAUSÄRZTE AM KNAPPSCHAFTSKRANKENHAUS BOCHUM
In der Schornau 25a, 44892 Bochum
+49(0)234 890665-81/82 | www.hausarzt-bo.de | info@hausarzt-bo.de



# இலங்கை வானொலியின் இசைத்தட்டுக் களஞ்சியம் இல்லை என்றால்
# பொங்கும் பூம்புனல் எங்கே! நீங்கள் கேட்டவை எங்கே!!



இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் நான் அறிவிப்பாளராக கடமையாற்றிய 1975களில் காலை ஒலிபரப்பை நடத்த வேண்டிய அறிவிப்பாளரை இலங்கை வானொலியின் வண்டி காலை 4 1/2, 5 மணிக்கே வீட்டிலிருந்து அள்ளிப் போட்டுக்கொண்டு வந்து காலை 51/2 மணிக்குள் நிலைய வாசலில் கொட்டி விடும். நேரடியாக கலையகத்துக்குப் போய் 6 மணி ஒலிபரப்பை ஆரம்பிக்க தயாராகி விட வேண்டும். நேரமிருந்தால் வானொலி நிலையத்தின் சொந்த சாயாக் கடைக்கு ஓடிப் போய் ஒரு தேநீர் அருந்தி விட்டு



கலையகம் செல்வோம். கலையகத்தில் சக்கரங்கள் கொண்ட சிறு அலுமாரி ஒன்று எமக்காகக் காத்திருக்கும். நாங்கள் கொண்டு வந்த சாவியைப் போட்டதும் அந்த records cabinet திறந்து கொள்ளும். சுமார் ஏழு நாட்களுக்கு முன்னர் நான் தெரிவு செய்த இசைத்தட்டுக்களும் இன்ன நிகழ்ச்சிக்கு இன்ன இசைத்துட்டு என்று வரிசைப்படுத்திய நிகழ்ச்சிப்பட்டியலும் ஆங்கில தட்டச்சில் அழகாக பொறிக்கப்பட்டு இசைத்தட்டுக்களுடன் வைக்கப்பட்டிருக்கும். ஆங்கிலத்தில் அழகாக பொறிப்பவர் தமிழ் வர்த்தக சேவை அறிவிப்பாளர்களின்



பேரபிமானத்திற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய விக்டோரியா நவம் ஜேசு என்பவர். இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் அறிவிப்பாளர்களாக பணியாற்றிய அனைவருக்கும் விக்டோரியாவைத் தெரியும்.

ஆனால் சகோதரி விக்டோரியாவோ தமிழ் வர்த்தக சேவை ஒலிபரப்பாளர்களை மட்டுமன்றி அத்தனை தமிழ் அறிவிப்பாளர்களின் பாடல் விருப்பங்களை இசைத்தெரிவுகளை மனனம் செய்தவர் போல் பணியாற்றும் ஒரு அசாதாரண சேவையாளர். காலை 6 AM முதல் 8 AM வரை ஹமீட் வரப்போகிறார், விமல் வரப்போகிறார் என்றால் அதற்கான இசைத்தட்டுக்களையும் ஏற்கனவே தெரிவு செய்து நிகழ்ச்சி நிரல் தயாரிப்புக்காக வைக்க வேண்டிய இடத்தில் வைத்து விடுவோம். விக்டோரியா அவர்கள் வேலையை ஆரம்பிக்க முன்னர் பக்திப்பாடல்கள், நினைவில் நிறைந்தவை, ஈழத்துப்பாடல்கள், பின் பொங்கும் பூம்புனல் இவற்றுக்கு எந்தெந்த அறிவிப்பாளர் எந்தெந்த இசைத்தட்டுக்களை, என்னென்ன பாடல்களை தெரிவு செய்திருக்கிறார்கள் என்று முதலில் தமது கைகளால் தட்டி கண்களால் 'ஸ்கேன்' செய்து விடுவார். அந்த Scan கள் அனைத்தும் அவரது



விமல் சொக்கநாதன்
(இங்கிலாந்து)

தலையில் உள்ள Hard Disc இல் சேமிக்கப்பட்டு விடும்.

Hard Disc இல் சேமிக்கப்படுவது அறிவிப்பாளர்களாகிய எமது பாடல் தெரிவுகள் மட்டுமல்ல தெரியப்பட்ட இசைத்தட்டுக்களின் இலக்கங்களும் தான். ஒரு பாடலை நீங்கள் குறிப்பிட்டால் அது COLUMBIA இசைத்தட்டா அல்லது HMV His Master's Voice ...?



இசைத்தட்டா..? நீல நிற லேபல் இலக்கம் என்ன..? HMV சிவப்பு நிற லேபல் இலக்கம் என்ன..? என்று உடனடியாக பதிலளிப்பார் சகோதரி விக்டோரியா. இன்று ஓய்வு பெற்று தமது கிராமமான நவாலியில் தமது இல்லத்தில் தமது ஓய்வு நாட்களை கழித்து வருகிறார்.

இணையற்ற புகழ் பெற்ற பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் ஒரு பேட்டியில் சொன்னது' நான் படங்களில் பாடும் போது அந்தப் பாட்டுக்கு வாயசைக்க போகும் நடிகர் யார் என்று கேட்டு அறிந்து கொள்வேன் அப்போது தான் சிவாஜிக்கு, எம். ஜி.ஆருக்கு ஜெமினிக்கு ஏற்றது போல் என் குரலை நான் ஓரளவு மாற்றிப்பாட முடியும்.'

'M.G.R ஒரு இளைஞனைப் போல் கையில் சவுக்குடன் படிகளில் பாய்ந்து பாய்ந்து ஆடிப் பாடும் பாடல் 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்' பலரது நினைவில் பல வருடங்கள் நிலைத்து நிற்கும் பாடல் TMS தமது பேட்டியில் நேயர்களிடம் சொன்னார்.

'நான் ஆணையிட்டால் பாடலை நீங்கள் கேட்கும் போது என் நினைவு உங்களுக்கு வரவே வராது. MGR துள்ளித் துள்ளி படிகளில் ஏறி ஓடும் காட்சி தான் உங்கள் நினைவுக்கு வுரும்.' பாலும் பழமும் படத்தில் போனால் போகட்டும் போட என்றால் சிவாஜியின் அந்த நடையல்லவா நினைவு வரும்.

இலங்கை வானொலியில் அற்புதமான ஒரு நிகழ்ச்சியை நீங்கள் கேட்கின்றீர்கள் .நிகழ்ச்சி நிறைவடைந்ததும், நிகழ்ச்சியை தயாரித்த அறிவிப்பாளர் ' இன்றைய நிகழ்ச்சியை இத்துடன் நிறைவு செய்யும் நான் எனக்கு உதவிய ஒலிப்பதிவு உதவி




யாளர என்பதோடு நிகழ்ச்சியை முடித்துக் கொள்வார்.

இந்த ஒலிப்பதிவில், தயாரிப்பில் உதவிய முகம் தெரியாத மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். விக்டோரியா போன்ற வர்களின் பெயர்கள் ஒலி அலைகளில் கலக்காமல் மறைந்து விடுகின்றன. ஆங்கில சினிமாப் பாடங்களை பார்க்கும் போது

28 ஆம் பக்கம் பார்க்க...




Lucky Fly Reisebüro
Luckyfly
மீண்டும் எங்கள் சேவைகள் ஆரம்பம்!
இது வரை வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு வருந்துகின்றோம்.
Be Safe Be happy
SriLankan
Frankfurt –Colombo Ab:650 €
New Summer 2022 Holidays
Book early & save BIG
அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
Let's Start again
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
QATAR AIRWAYS
Emirates
Gulf Air
Essener Str.26 44793 Bochum-Germany


மங்கல இசை
உங்கள் மங்களகரமான வைபவங்கள் அனைத்திற்கும் நாடுங்கள்.
ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி தவில் லயஞானச் சுடரொளி
கே.பி.செல்வநாயகம்
0178 666 4426
0157 388 27 634
0202 2713 698


லஷ்மி திருமண சேவை
உலகளாவிய ரீதியில் சுவிட்சிலாந்தில் இயங்கிக் கொண்டிருக்கும் முதன்மையான திருமணசேவை...
உங்களுக்கு தகுந்த வரனை தெரிவு செய்திட, உங்களின் நீண்ட கால கனவுகளை நிஜமாக்கிட, நீண்ட காலமாக வரன்கள் தேடியும் அமையப் பெறாதவர்களும் இன்றே அழையுங்கள்.
எமது சேவைகள் யாவும், விரைவாகவும், நேர்மையாகவும், பாதுகாப்பாகவும் பேணப்படும்.
குறிப்பு: விவாகரத்து ஆனவர்களும், துணைவன் அல்லது துணைவியை இழந்தவர்களும் உரிய ஆவணங்களுடன் மறுமணத்திற்கு தொடர்பு கொள்ளலாம்.
0041767611801
luxmi@gmx.ch



# நிஜவாழ்வில் உங்கள் கதாநாயகன்! HERO

சிறுவர்களை மிக இலகுவில் ஈர்க்கக்கூடிய கதாபாத்திரங்கள் சூப்பர் ஹீரோக்கள். சாமானிய மனிதர்களைவிட ஏதோ ஒருவகையான சக்திகளைக்கொண்ட இவர்கள், திரையில் அநியாயங்களை தட்டிக்கேற்கும் ரீல் ஹீரோக்கள் ! நிஜ வாழ்க்கையில் யாருமே பார்த்திராத கதாபாத்திரங்களை திரையில் பார்க்கும்போது ரசிகர்கள் லொஜிக், ரியாலிட்டி போன்ற வரையறைகள் மீறப்படுவதைக்கூட பொருட்படுத்துவதில்லை. இன்றைய சர்வதேச சினிமாவில் கோடிகளை வசூலித்துக்கொடுக்கும் கேரண்டியைக்கொடுப்பவை சூப்பர் ஹீரோ திரைப்படங்கள்.

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் காமிக்ஸ் புத்தகங்களில் இடம்பெற்ற கதாபாத்திரங்கள் இன்னும் புதிதாக தோன்றக் காரணம் என்ன? சிறுவர்களை மட்டுமே இலக்காக வைத்து உருவாக்கப்பட்ட காமிக்ஸ் புத்தகங்களுக்கு பெரியவர்களும் ரசிகர்களாக இருப்பது எப்படி? அமெரிக்காவை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இந்த கதாபாத்திரங்களால் உலகில் உள்ள பெரும்பாலான மக்களை ஈர்த்துக்கொள்ள முடிந்ததெப்படி?

சூப்பர் ஹீரோக்கள் சென்ற நூற்றாண்டிலிருந்துதான் பிரசித்தி பெற்றார்கள் என கூறப்பட்டாலும், உண்மையில் சூப்பர் ஹீரோக்களின் வரலாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டதெனலாம். கதை சொல்லும் முறை அறிமுகமானத்திலிருந்தே சூப்பர் ஹீரோக்களும் நம்மோடு உறவாடத்தொடங்கிவிட்டனர் போலும். நம்முடைய ராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும், புராணங்களிலும் வருபவர்கள், சூயஸ், ஹெர்க்யூலீஸ் போன்ற கிரேக்க புராணங்களில் இடம்பெற்ற ஹீரோக்கள் என உலகின் பல்வேறு இலக்கியங்களிலும் ஏராளமான சூப்பர் ஹீரோக்கள் உருவாகியிருந்தனர்.அன்றைய சூப்பர் ஹீரோக்களின்



சக்தி கடவுளிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக சொல்லப்பட, இன்றைய சூப்பர் ஹீரோக்கள் அறிவியலின் உதவியுடன் உருவாக்கப்பட்டனர். 1930களில் அமேரிக்கா கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தது. கொலை கொள்ளை போன்றவை மலிந்திருந்த அப்போதைய அமெரிக்காவில், லிதுவேனியாவிலிருந்து இடம்பெயர்ந்திருந்த மிச்சேல் சிகல் (mitchell siegel) என்பவர் கொள்ளையர்களால் சுட்டுவீழ்த்தப்பட, இந்த சம்பவம் மிச்சலின் மகன் ஜெர்ரியை (jerry siegel) கடுமையாக பாதித்தது. சராசரி மனிதனான தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதையுணர்ந்த ஜெர்ரி துப்பாக்கித் தோட்டாக்கள் துளைக்காத மனிதர்கள் இருந்தால் எப்படியிருக்கும் என யோசித்தார். அப்போது, அறிவியலில் ஈடுபாடு கொண்டிருந்த ஜெர்ரி சீகளால் உருவாக்கப்பட்ட தோட்டாக்கள் துளைக்காத முதல் சூப்பர் ஹீரோ கதாபாத்திரமே சூப்பர் மேன். சொந்த நாட்டை விட்டு வெளியேறி வாடிய ஜெர்ரி, சொந்த கிரகத்தை விட்டு வெளியேறி வாடுபவராக சூப்பர் மேனை உருவாக்கினார். உண்மையில் வலிமையை பறைசாற்ற சூப்பர் மேன் உருவாக்கப்படவில்லை. மனிதனின் இயலாமையை நீக்குவதற்காக உருவாகிய கதாபாத்திரமே அது.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

சூப்பர் மேனின் மதிப்பை உணர்ந்த DC Comics நிறுவனம் ஜெர்ரியிடம் இருந்து அதன் மொத்த உரிமத்தையும் வாங்கிக்கொண்டது. பின்னாளில் கோடிகோடியாக குவிக்கப்போகும் படைப்பு என்பது தெரியாமல் வறுமை காரணமாக சொற்ப விலைக்கு அது விற்கப்பட்டது. அதேநேரத்தில் Dc comics ன் பரம வைரியான மார்வெல் காமிஸ் (marvel comics) சூப்பர் மேன் கதாபாத்திரம்போலவே தாமும் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கி அமெரிக்க மக்களை தம்வசம் ஈர்க்க நினைத்து உருவாக்கிய கதாபாத்திரமே கேப்டன் அமேரிக்கா’.

இரண்டாம் உலகப்போர் காலமது,அமெரிக்க மக்களை நாட்டு பற்றை ஊட்டி போருக்கு ஈர்க்க வேண்டிய கட்டாயம். அதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களில் ஒன்று மார்வெலின் ‘கேப்டன் அமேரிக்கா’. நாட்டுக்காக போரில் ஈடுபட துடிக்கும் இளைஞன் ஒருவன் தகுந்த உடற் தகுதியில்லாததால் ராணுவத்தால் புறக்கணிக்கப்பட , பின்னர் “super solidier serum” மூலம் அசாத்திய சக்தி பெற்று அமெரிக்காவின் எதிரியான ஹிட்லரை பந்தாடுகின்றார் . அந்த கதாபாத்திரமும் அள்ளிக்கொடுத்த வெற்றியால் DC Comix மற்றும் marvel புதியபுதிய சூப்பர் ஹீரோக்களை உருவாக்கத்தொடங்கினர். Spider man, batman, iron man, black panther, hulk, ant man, aquaman, asterix , flash,thor, x-men, wonder women என சூப்பர் ஹீரோக்களின் தேசமானது அமேரிக்கா .



இரண்டாம் உலகப்போருக்குப்பின்னர் நாட்டுப்பற்றை போதிக்கும் சூப்பர் ஹீரோக்கள் மீதான மோகம் மக்களிடையே குறைய ஆரம்பிக்கவே துப்பறியும் மற்றும் கிரைம் ஹீரோக்களை நோக்கி காமிஸ் புத்தகங்கள் தமது பார்வையை திருப்ப, அதேநேரத்தில் வானொலி, தொலைகாட்சி தொடர் என படிப்படியாக முன்னேறி ஹாலிவூட்டில் கோடிகளை அள்ளிக்குவிக்கும் திரைப்படங்களாக,அனிமேஷன் கார்டூன்களாக இந்த சூப்பர் ஹீரோக்களின் கதைகளின் வெற்றி அசாத்திய வளர்ச்சியினை அடைந்து வீறுநடை போடுகின்றதெனலாம்.

கணினி விளையாட்டுகள், காமிக்ஸ் மற்றும் கார்ட்டூன் ஹீரோக்கள் என இவை அனைத்தும் நிஜ உலகத்திலிருந்து குழந்தைகளை அழைத்துச் செல்லும் கனவு தொழிற்சாலையின் ஒரு பகுதியாகும். ஒருவரைப் பின்பற்ற முயற்சிக்கும் ஒரு குழந்தையின் ஆசை எப்போதும் இயல்பானது, ஆனால் நிஜத்திற்கும் ரீலுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை

28 ஆம் பக்கம் பார்க்க...





# மன்னிப்பு மானிடப் பெரு மாண்பு

நீ பிறந்த நாள் முதல் நிலாவைப் பார்த்திருப்பாய்,
என்றேனும் நிலா நெருப்புக்
கக்கியதைப் பார்த்ததுண்டா?

நீ பிறந்த நாள் முதல் பூக்களைப் பார்த்திருப்பாய்,
என்றேனும் பூக்கள் திரவம் கக்கியதைப்
பார்த்ததுண்டா?

நீ பிறந்த நாள் முதல் முறிந்த கிளைகளைப்
பார்த்திருப்பாய்,
என்றேனும் மரம் கோபம் கொண்டு காற்றைத்
திட்டியதைப் பார்த்ததுண்டா?

நீ பிறந்த நாள் முதல் நதிகளைப் பார்த்திருப்பாய்,
என்றேனும் நதி தடுக்கும் பாறைகளைத்
தழுவாமல் போனதைப் பார்த்ததுண்டா?

சண்டையில் வீழும் மனிதர்களைவிட
சமாதானத்தில் எழும் மானிடமே உன்னதம்.
தண்டனையில் அழும் மனிதர்களை விட
மன்னிப்பில் மகிழும் மானிடமே உன்னதம்.
மன்னித்துப் பார் ,மனது மோட்சம் பெறும்.

இந்த இயற்கை இத்தனை காலம் வாழ
இவைகளின் பொறுமையன்றோ காரணம்.

எத்தனை முறைதான் மன்னிப்பது என்று
மனந்தளராதே!
எத்தனை முறையானாலும் மன்னி
ஏனெனில்,மரணம் வரை மட்டுமே
மன்னிக்கும் சக்தி உனக்குள்ளது.

கல்லாறு சதீஷ்
(சுவிஸ்)







# மணவினைகள் யாருடனோ மாயவனின் விதி வகைகள்

## பிளாஷ்பேக்

அப்போது [ 1977 ] நான் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அண்ணா – கே.கே.எஸ், சுன்னாகம் தியேட்டர்களுக்குப் போகும்போது அவருடன் சைக்கிளில் தொத்திக் கொண்டு படம் பார்க்கப் போய் விடுவேன். ஆனால் மூன்று முடிச்சு படத்தை அண்ணாவுடன் பஸ்சில் சென்று யாழ்ப்பாணத்தில் வின்ஸர் திஜேட்டரில் பார்த்தேன்.

இப்போது நினைவு மீட்டிப் பார்க்கும்போது, இந்தப் படத்தில் நடித்தபோது ஸ்ரீதேவிக்கு விக்கிபீடியாவின் கணக்குப்படி அப்போது வயது பதின்மூன்று. நம்ப

கே.எஸ்.சுதாகர்
அவுஸ்திரேலியா

முடியாமல் இருக்கின்றது. வயதுக்கு மீறிய தோரணையில் [18 வயதுப் பெண்ணாக] அவர் அந்தப் படத்தில் நடித்திருப்பார். கமல் ரஜனியுடன் போட்டி போட்டுக் கொண்டு, உண்மையில் சொல்லப் போனால் நடிப்பில் எல்லோரையும் விஞ்சி நிற்பார் ஸ்ரீதேவி.

கே.பாலசந்தர், கவிஞர் கண்ணதாசன், எம்.எஸ்.வி கூட்டுச் சேர்ந்தால் சொல்லத் தேவையில்லை. அதேபோல் கமல் ஸ்ரீதேவி ரஜனி. பொதுவாக பாலசந்தர் இரண்டு மூன்று கதைகளை வைத்துக் கொண்டுதான் எல்லாப் படங்களிலும் சிலம்பம் ஆடுவார். அவற்றைத்தான் சுற்றிச் சுழட்டி மாற்றி மாற்றித் தரு



வார். அதில் அவர் கை தேர்ந்தவர். கதை வசனகர்த்தாவான அனந்து அவரின் வலது கரம்.

கமல் ஸ்ரீதேவி ரஜனி கூட்டுச் சேர்ந்த இன்னொரு படம் பாரதிராஜாவின் 16 வயதினிலே. அதில் ரஜனிக்கு சிறிய வேடம் என்றால் மூன்று முடிச்சில் கமலுக்கு கௌரவ வேடம். துணைவன் படத்தின் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிய ஸ்ரீதேவியை கதாநாயகியாக மூன்று முடிச்சில் அறிமுகம் செய்தார் பாலச்சந்தர்.

படத்தின் தொடக்கமாக படத்துக்குள் படமாக அரங்கேற்றம் வரும். அதுவம் கே.பாலசந்தரின் படம் தான். மூன்றுமுடிச்சு படத்தில் இடம்பெறும் ஆடி வெள்ளி தேடி உன்னை, வசந்தகால நதிகளிலே என்ற பாடல்கள் அந்தாதி வகையைச் சார்ந்தவை.

ரஜனிகாந் அப்போதுதான் திரைப்படத்துறைக்கு அறிமுகமாகியிருந்தார். அபூர்வராகங்கள் திரைப்படத்தில் ஒரு சிறிய வேடத்தில் நடித்திருந்தாலும், அதில் அவரை அடையாளம் காணமுடியவில்லை. தியேட்டரில் ஒரே சனத்திரளாக இருந்தது. சத்தம் சந்தடி இல்லாமல் எல்லாரும் படத்தில் மூழ்கிய படி இருந்தார்கள். வசந்தகால நதிகளிலே பாடல். படகில் கமல் ஸ்ரீதேவி ரஜனி. கமல் ஆற்றினுள் தவறி விழுந்துவிடுவார். ரஜனி நீச்சல் தெரிந்திருந்தும் கமலைக் காப்பாற்ற மாட்டார். அந்த நேரத்தில் ரஜனிக்காக எம்.எஸ்.வி.குரல் குடுத்திருப்பார். கர்டுமுரடான குரல்.

**‘மணவினைகள் யாருடனோ
மாயவனின் விதி வகைகள்
விதிவகையை முடிவு செய்யும்
வசந்தகால நீரலைகள்’**

நான் பயந்தே போய்விட்டேன். இனி என்ன? கமல் இறந்துவிட்டார். யார் இந்த ரஜனி? பயங்கர முரடனாக இருப்பார் போலும். படம் முடிந்துவிட்டது என எண்ணியபடி இருக்கையிலிருந்து எழுந்துவிட்டேன். அண்ணா கையைப் பிடித்து இருத்தினார். இனித்தான் படம் என்றார். அப்புறம் படம் சூடு பிடித்தது. ரஜனியும் ஸ்ரீதேவியும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பது போல் நடித்தார்கள்.

2018 ஆம் ஆண்டு துபாயில் திருமண நிகழ்வுக்காகச் சென்றிருந்த வேளையில் ஸ்ரீதேவி காலமாகிவிட்டார். ஜெயலலிதாவின் மரணம் போலவே இவரது மரணத்திலும் குழப்பம். மர்மம். சாருக்கான் இயக்கிய சீரோ (Zero) படம் தான் ஸ்ரீதேவியின்; கடைசிப் படம் எனத் தெரிய வருகின்றது. ஸ்ரீதேவியின் மரணத்தை நினைக்கும்போது மூன்றுமுடிச்சு படத்தில் வரும்,

**மணவினைகள் யாருடனோ
மாயவனின் விதி வகைகள்
விதிவகையை முடிவு செய்யும்
வசந்தகால நீரலைகள் –**

என்பதுதான் ஞாபகத்திற்கு வருகின்றது.





# குதிக்கால் எலும்புத் துருத்தல்

மூஞ்சையில் இடிக்காதவாறு நீட்டினார் 'எக்ஸ்ரே'யை பாருங்கோ வடிவா! குதிக்காலிலை எலும்பு வளர்ந்திருக்காம். என்ன செய்யிறது? வெட்ட வேணுமே மூச்சு விட நேரமில்லாமல் பேசினார்.

அவரது குதிக்கால் எலும்பின் கீழ்ப்புறமாக பிசிறுபோல எலும்பு சற்று வளர்ந்திருந்தமை தெரிந்தது. குதிக்காலில் வலி என ஒரு மருத்துவரிடம் காட்டியபோது அவர் மருந்து மாத்திரைகள் கொடுத்து தசைப் பயிற்சிகளையும் சொல்லிக் கொடுத்துள்ளார். பேச்சோடு பேச்சாக குதிக்கால் எலும்பிலும் சிறுவளர்ச்சி என்று சொன்னதால் வந்த வினை.

எக்ஸ்ரேயுடன் மருத்துவர் மருத்துவராக ஓடித் திரிகிறார். குதிக்காலின் பிரதான எலும்பு கல்கேனியம் எனப்படுகிறது. உடல் எடையைப் பெருமளவு தாங்கும் எலும்பு என்பதுடன் பாதத்தின் முக்கிய தசை நாரான குதிக்கால் சவ்வு (plantar-fascia) இதனுடன் இணைந்துள்ளது.

இந்தச் சவ்வு மிகவும் பலமுள்ளதாக இறுக்கமானதாகவும் இருக்கிறது. இச் சவ்வுதான் பாதத்தின் அடிப் பகுதியில் உள்ள வளைவைப் பேண உதவுகிறது. அத்துடன் நடக்கும்போதும் ஓடும்போதும் உடலின் எடையானது பாதத்தில் சமச்சீராக தாங்கப்படுவதற்கும் உதவுகிறது.

இந்த கல்கேனியம் என்ற எலும்பின் கீழ்ப்புறத்தில் கல்சியம் படிவதையே (C) குதிக்கால் எலும்புத் துருத்தல் என்பார்கள். அந்த எலும்பின் முற்புறமாக அரைஅங்குல நீளம் வரை நீண்டு அது வளர்வதுண்டு. குதிக்கால் வலியென நோயாளிகள் சொல்லும்போது மருத்துவர்கள் எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்க்கும்போது இது



தெரியவரும். இருந்தபோதும் வேறு காரணங்களுக்காக எக்ஸ்ரே எடுக்கும்போது தான் பெரும்பாலும் இந்த எலும்பு வளர்ச்சி இருப்பது தெரியவருகிறது. இது ஆபத்தான நோயல்ல. குதிக்கால் எலும்புத் துருத்தலால் அறிகுறிகள் எதுவும் பொதுவாக ஏற்படுவதில்லை. இருந்தபோதும் அவர்களுக்கு குதிக்காலில் இருக்கக் கூடும். நடத்தல் ஓடதல்,துள்ளல், நடை போன்றவற்றின்போது வலி தெரியவரலாம். இருந்தாலும் வலி ஏற்படுவதற்குக் காரணம் குதி எலும்புத் துருத்தல் அல்ல. அருகில் உள்ள குதிக்கால் சவ்வு தசைநாரில் அழற்சி ஏற்படுவதே வலிக்குக் காரணமாக பெரும்பாலும் இருப்பதுண்டு.

காலையில் எழுந்து காலடி வைக்க ஆரம்பிக்கும்போது குதிக்காலில் சுளீரெனக்குத்துவதுபோல வலிக்கும். அதேபோல சற்று நேரம் ஓய்வாக உட்கார்ந்திருந்துவிட்டு நடக்க ஆரம்பிக்கும்போது அதே விதமாகக் குத்துவது போன்ற வலி ஏற்படும். ஆனால் இதே விதமான அறிகுறிகள் குதிக்கால் சவ்வுஅழற்சியின்(Planterfascitis) போதும் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

காலையில் எழுந்திருக்கும்போது குதிக்கால் சவ்வு மிகவும் இறுக்கமாக இருப்பதால் சிறிய அசைவுகள் கூட வேதனையை ஏற்படுத்துகின்றன. ஆயினும் சற்று நடந்த பின்னர் அதன் இறுக்கத்தில் சற்று தளர்ச்சி ஏற்பட ஆரம்பிப்பதால் வேதனை சற்றுக் குறையும். இதனால்தான் காலை எழுந்து நடமாட முன்னர் பாதத்தை தங்கள் கைகளால் மசாஜ் செய்யும்படி குதிக்கால் வலி உள்ளவர்களுக்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்குவர்.

குதிக்கால் சவ்வு அழற்சி மற்றும் குதிக்கால் எலும்புத் துருத்தல் அறிகுறிகள் ஒரேவிதமாக இருப்பதால் பலரும் ஒன்றை ஒன்று குழப்பிக் கொள்வதுண்டு. இருந்தபோதும் குதிக்கால்சவ்வு அழற்சி உள்ளவர்களிடட 70 சதவிகி தமானவர்களுக்கு குதிக்கால் எலும்புத் துருத்தல் இருப்பதைத் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. அதே நேரம் பாதத்தில் எந்த வலிகளும் இல்லாதவர்களில் 70 சத விகிதமானவர்களுக்கு குதிக்கால் எலும்பு துருத்தி இருப்பதும் உண்டு.

குதிக்கால் எலும்புத் துருத்தல் ஏன் ஏற்படுகிறது என்பது தெளிவாகத் தெரியாது. இதுதிடீரெனத் தோன்றுவதில்லை. படிப்படியாகவே வளர்கிறது. பாதத்தில் உள்ள தசைகளுக்கும் சவ்வுகளுக்கும் வினைப்பளு (Strain) அதிகமாதலால் அவை நீளவாக்கில் இழுபடுகின்றன. இதனால் அவை எலும்பில் பற்றியிருக்கும் மெல்லிய சவ்வுகளில் நுண்ணிய கிழிவுகள் ஏற்படுகிறது. இவற்றின் தொடர்ச்சியாகவே அவ்விடங்களில் எலும்பு துருத்தி வளர்கிறது என நம்பப்படுகிறது.

கடுமையாக ஓடுவது துள்ளுவது போன்ற பயிற்சிகளைச் செய்யும் விளையாட்டு வீரர்களில் இதன் காரணமாகவே அதிகளவில் குதி எலும்பு துருத்தல் பிரச்சனை காணப்படுகிறது. குதி எலும்பு துருத்தி யாரில் அதிகம் ஏற்படுகிறது ஏற்கனவே குறிப்பட்டது போன்ற கடுமையான உடற் பயிற்சிகள் செய்பவர்களுக்கு ஏற்பட வாய்ப்புண்டு.

நடையின் இயல்பில் பாதிப்பு உள்ளவர்களுக்கும் அவ்வாறே ஏற்பட வாய்ப்புண்டு. நடையின் இயல்பு என்றால் என்ன? பொதுவாக நாம் நடக்கும்போது இரண்டு பாதங்களிலும் உடற் பாரமானது ஒரே விதமாக விழுமாறு நடக்கிறோம். ஒரு கால் சற்றுக் குட்டையாக அல்லது பாதத்தில் வளைவுகள் சீரற்றோ இருந்தால் ஒரு பாதத்தில் அதிக தாக்கம் ஏற்படும். இது எலும்பு துருத்தலுக்கு காரணமாகலாம்.

அதேபோல ஒரு பக்க முழங்காலில், பாதத்தில், அல்லது தொடையில் வலியிருந்தாலும் நாம் எம்மையறியாது பாரத்தை மற்றக் காலில் அதிகம் பொறுக்கவைப்போம். இதுவும் காரணமாகலாம். கடுமையான தரைகளில் ஓடுவது துள்ளல் நடைபோடுவது போன்றவையும் காரணமாகலாம். பொருத்தமற்ற காலணிகள் மற்றொருமுக்கிய காரணமாகும். தேய்ந்த காலணிகளும் அவ்வாறு எலும்புத்துருத்தலுக்கு வழிவகுக்கலாம்.

உடல் எடை அதிகமான குண்டு மனிதர்களுக்கும் வாய்ப்பு அதிகமாகும். வயது முதிரும்போது குதிக்



கால் சவ்வினது நெகிழ்வுத்தன்மை குறைந்து போகிறது. அத்துடன் பாதத்திற்குப் பாதுகாப்பைத் தரும் கொழுப்பின் அளவு குறைந்து போவதும் காரணமாகலாம். நீரிழிவு நோயுள்ளவர்களின் பாதத்தின் நரம்புகளும் தசைகளும் பவீனமடைவதாலும் ஏற்பட வாய்ப்புண்டு. வேறு சிலருக்கு பாதத்தின் வளைவு அதீதமாக இருப்பதுண்டு. இவர்களுக்கும் குதிக்கால் எலும்புத் துருத்தல் ஏற்படக்கூடும்.

**சிகிச்சை:** குதிக்கால் சவ்வு அழற்சி மற்றும் குதிக்கால் எலும்பு துருத்தல் இரண்டும் வேறு வேறான நோய்களாக இருந்தபோதும் அவை ஏற்படுவதற்கான காரணங்களும் அவற்றின் அறிகுறிகளும் ஒரே விதமானவைதான் எனவே சிகிச்சையும் ஒரே மாதிரியானதுதான்.



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# பரதநாட்டிய ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு 2021 யேர்மனி




திருமதி யாதவி அன்ரனி சுரேஸ்குமார் | திருமதி. பென்சீகா அல்பேர்ட் டென் பொஸ்கோ | செல்வி மீரியம்ஜோவானி நோயல் பெர்னாண்டோ




டன்யா றிஷானி றொயின்சன் | செல்வி பகீரதி கணேசலிங்கம் | திருமதி தர்ஷிகா சுதர்சன்




திருமதி சதுர்ஷா சுகுமார் ஸ்ரீமுருகன் | செல்வி மேனுகா ஈஸ்வரலிங்கம்

30.10.2021 பரத நாட்டிய ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு நடுவர்கள் இடம் இருந்து வலமாக
முதுகலைமானி பவானி சிறீதரன் | முதுகலைமானி நிமலினி ஜெயகுமார்
முனைவர் சந்திரவதனி விஜயசுந்தரம் | முனைவர் மதிவதனி சுதாகரன்

படங்கள்: www.Konessfotos.de

Arnsberg அனைத்துலக தமிழ்க் கலை நிறுவகமும் பாரதி கலைக் கூடமும் இணைந்து நடாத்திய பரத நாட்டிய ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு 30.10.2021 சனிக்கிழமை யேர்மனி Arnsberg நகரத்தில நடைபெற்றது. எட்டு மாணவிகள் மிகத்திறமையாக தங்கள் ஆற்றுகையை வெளிப்படுத்தினர்.

இத்தேர்வில் ஆடற்கலாலய அதிபரும் யேர்மன் கலைபண்பாட்டுக் கழக நடன ஆசிரியருமான திருமதி. றெயனி சத்தியகுமார் அவர்களின் மாணவி திருமதி தர்ஷிகா சுதர்சன். அவர்களும் நடன ஆசிரியர் நாட்டிய கலாரத்தினா திருமதி சாவித்திரி சரவணன் (M.A.M.Phli.in Bharathan-atiyam) அவர்களின் மாணவிகள். செல்வி மேனுகா ஈஸ்வரலிங்கம், திருமதி சதுர்ஷா சுகுமார் ஸ்ரீமுருகன். அவர்களும் தேர்வில் கலந்து கொண்டனர்.

நிருத்திய நாட்டியாலய அதிபர் பரத சூடாமணி திருமதி அமலா அன்ரனி சுரேஸ்குமார் அவர்களின் மாணவிகளான திருமதி யாதவி அன்ரனி சுரேஸ்குமார, டன்யா றிஷானி றொயின்சன், செல்வி.மீரியம்.ஜோவானி நோயல் பெர்னாண்டேர், செல்வி. பகீரதி கணேசலிங்கம்,

26 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்




ஆனந்தராணி பாலேந்திரா (UK)

# 'கோடை' நாடகம்- 1979

கடந்த இதழில் யாழ். நாடக அரங்கக் கல்லூரி 1979 இல் தனது முதலாவது நாடகமாக ஈழத்து மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் 1966 ஆம் ஆண்டு எழுதிய 'கோடை' நாடகத்தைத் தயாரிக்க ஆரம்பித்தது பற்றியும் அதில் நான் தாய் செல்லம் பாத்திரத்தில் நடிக்க ஒப்புக்கொண்டது பற்றியும் எழுதியிருந்தேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஏழ்மையில் வாடும் நாதஸ்வரக்காரர் மாணிக்கம். இந்தக் கலைகளில் பெரிதும் ஆர்வமில்லாது, கலைஞர் குடும்பத்திலிருந்து சம்பந்தம் வந்தும், மகளை ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்குத்தான் திருமணம் செய்து வைப்பது என்ற பெருங்கனவு காணும் மனைவி செல்லம். திருமண வயதில் மகள் கமலி. பள்ளி செல்லும் மகன் கணேசு. இவர்களது வீட்டில் தங்கியிருந்து நாதஸ்வரத்தைக் கற்கும் சிஷ்யப்பிள்ளை சோமு. இவர்களுடன் பஞ்சையர், விதானையார், முருகப்பு, காசி, சாமியார் என இந்தக் குடும்பத்துடன் தொடர்புபட்டவர்கள். இவர்கள் வாழ்க்கையோடு விளையாடும் அதிகார வர்க்கம் என நாடகம் நகர்கிறது.

'கோடை' நாடகம் முதல்முதலாக தாசீசியஸ் அவர்களின் நெறியாள்கையில் 1969இல் கொழும்பிலே மேடையேறியது. இந்த நாடகத்தில் தாய் செல்லமாக ஈஸ்வரநிதி ராஜரத்தினம், மகள் கமலியாக சித்திரா ராம்ஈஸ்வரா ஆகியோர் நடித்திருந்தார்கள். இரண்டாவது மேடையேற்றம் 1970ல் மட்டக்களப்பில் இடம்பெற்றது. இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக யாழ். நாடக அரங்கக் கல்லூரிக்காக 1979இல் தயாரிக்கப்பட்டது. இதில் தான் நான் நடித்தேன். தாய் செல்லம் பாத்திரம் ஒரு எதிர்மறையான பாத்திரம். (Negative Role) பொதுவாக எதிர்மறையான பாத்திரத்தில் நடிப்பதற்குப் பலர் விரும்புவதில்லை. நான் அந்தப் பாத்திரத்தில் நடிக்கச் சம்மதித்த பின்னர் மகள் கமலி பாத்திரத்தில் நடிப்பதற்காக அப்போது யாழ்ப்பாணத்தில் நடனக் கலைஞராக இருந்த ரேலங்கி செல்லையா [செல்வராஜா] வைக் கேட்பதற்காக சண்முகலிங்கம் மாஸ்டர் என்னையும் அழைத்துக் கொண்டு போனார். அப்போது அவர் ஒரு கார் வைத்திருந்தார். ரேலங்கியுடன் அவருடைய அப்பா ஓவியர் கே.கே.வி.செல்லையா அவர்களும் வந்திருந்து 'கோடை' நாடகக் கதையைக் கேட்டார். மகளை நடிக்க விடத் தனக்குச் சம்மதம் என்று கூறினார். நாதஸ்வரக் கலைஞரின் கதை என்பதால் நடனக் கலைஞரான தனது மகளின் நடனம் ஒன்றையும் இணைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

சண்முகலிங்கம் மாஸ்டர் நாடகத்தின் தன்மையை விளங்கப்படுத்தி இடைச்செருகல் எல்லாம் செய்ய முடியாது என்று கூறினார். அப்படியென்றால் மகளை நடிக்கவிட முடியாது என்று ரேலங்கியின் அப்பா மறுத்துவிட்டார். நாங்கள் வந்த வழியே திரும்பிவிட்டோம். சண்முகலிங்கம் மாஸ்டர் நல்ல நகைச்சுவை உணர்வு உள்ளவர். காரில் திரும்ப வரும்போது இந்த சம்பவத்தை ஒரு நகைச்சுவையாகவே எடுத்து அவர் அதுபற்றி சுவாரஸ்யமாகக் கதைத்துக்கொண்டு வந்தது நன்றாக நினைவிருக்கிறது. ரேலங்கி நாதஸ்வர – நாட்டியக் கலைஞர்களை மையமாக வைத்து எடுக்கப்பட்ட ஈழத்துத் திரைப்படமான 'தெய்வம் தந்த வீடு படத்தில் நடித்துள்ளார். இப்படம் 1978 இல் வெளியானது.

சில நாட்களின் பின்னர் மகள் பாத்திரத்தில் நடிப்பதற்கு ஒரு பெண்ணைக் கண்டுபிடித்துவிட்டதாகச் சொன்ன சண்முகலிங்கம் மாஸ்டர் விரைவில் 'கோடை' நாடக ஒத்திகைகள் ஆரம்பமாகுமெனக் கூறினார். முதலாவது ஒத்திகைக்குப் போனபோது நாடகப் பயிற்சிப் பட்டறைக்கு வந்திருந்த பல நாடகக் கலைஞர்களை நான் சந்தித்தேன். ஒத்திகைகள் வார நாட்களில் மாலை வேளைகளிலும் வார இறுதி நாட்களில் பகல் வேளைகளிலும் யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் இருந்த ஒரு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. ஒத்திகைகள் முடிய மிகவும் பிந்திய இரவுகளில் சண்முகலிங்கம் மாஸ்டர் என்னைத் தனது காரில் பத்திரமாக வீட்டில் கொண்டுவந்து விடுவார்.

'கோடை' நாடகத்தில் என்னுடன், அக்காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த நாடகக் கலைஞர்கள் பலர் நடித்தனர். நாதஸ்வரக் கலைஞர் மாணிக்கமாக பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் நடித்தார். காசியாக ஏ.ரி.பொன்னுத்துரை அவர்கள் நடித்தார். மகள் கமலியாக கௌரி வேதநாயகம், விதானையாராக ஜி.பி.பேர்மினஸ், பஞ்சையராக ரி.எஸ். லோகநாதன், சோமுவாக சோ. தேவராசா, முருகப்புவாக தா.சண்முகநாதன், சாமியாராக கே. தனபாலசிங்கம், மகன் கணேசுவாக ஞா.செந்தீஸ்வரன் ஆகியோர் நடித்தனர். இந்த நாடகத்தை இளைஞரான வீ.எம்.குகராஜா நெறிப்படுத்தியிருந்தார். நாடக அரங்கக் கல்லூரி சார்பில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களும் அ.தாசீசியஸ் அவர்களும் தயாரித்திருந்தார்கள்.

சில கிழமைகள் நடந்த ஒத்திகைகளுக்குப் பின்னர் 'கோடை' நாடகம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

26 ஆம் பக்கம் பார்க்க...



ரேலங்கி செல்வராஜா




இடம் இருந்து வலமாக மஹாகவி , வீ.எம்.குகராஜா, ஏ.ரி.பொன்னத்துரை, ஆனந்தராணி




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்






## அன்று தொய்யில் என வரைந்தது இன்று Tattoo கலையாக மாறியுள்ளது

தோல் போர்த்திய உடலிலே வகை வகையான வண்ணங்களில் பிடித்தவர்களின் உருவங்கள், காதலர்களின் பெயர்கள், குறியீடுகள் என்று உடல் முழுவதும் பச்சை குத்திக் கொண்டு வலம் வருகின்றவர்களை இன்று உலகம் முழுவதும் காணுகின்றோம். காதல் தோல்வி ஏற்பட்டுவிட்டால், பச்சை குத்திய காதலியின் பெயரை அழிக்க முடியாது அதற்கு மேலே கீறிக் கிழித்துக் கொண்டு வாழுகின்றவர்களையும் அறிகின்றோம்.

இது இன்று நேற்று வந்த வழக்கமில்லை. எனது பாட்டியினுடைய கையிலே ஒரு பச்சை குத்தப்பட்டிருந்தது. இதைத்தான் அழிக்கமுடியாதே! குத்தும் போது இத்தனை வேதனையுடன் இதன் குத்தத்தான் வேண்டுமா என்று கேட்டதற்கு இறந்த பின் கடவுள் எங்களிடம் எனக்கு என்ன கொண்டு வந்தாய் என்று கேட்டால் காட்டுவற்காகத் தான் பச்சை குத்துவார்கள் என்று சொன்னார். அக்காலத்தில் குறவர் என்றொரு இனத்தவர்கள் மார்பு, கை, கால், முன்னங்கை, புயம் போன்ற இடங்களில் பச்சை குத்துவார்கள். அவர்கள் மஞ்சள்தூளையும் அகத்திக்கீரையையும் தீயிலே எரித்துக் கரியாக்கி அக்கரியை நீரிலே குழைத்து மையை தயாரிப்பார்கள். இந்த மையை கூர்மையான ஊசி அல்லது கத்தியால் தொட்டுத் தொட்டுத் தோலில் குத்திக்குத்தி உருவங்களை வரைவார்கள். ஒருமுறை குத்தினால், குத்திய பச்சை வாழும் காலம் வரை எம்முடன் தொடர்ந்து வரும்.

இப்பச்சைக் கலாசாரத்தின் முன்னோடிகளாக ஜப்பான் சுதேசிகளான அயனுகளும் நியூசிலாந்தின் பழங்குடியினரான மவோரிகளும் காணப்படுகின்றார்கள். அவர்களிடமிருந்து மங்கோலியரிடமும் அங்கிருந்து ரோமரும் கிரேக்கரும் உலகமெங்கும் பரவவிட்டனர் என்று சொல்லப்படுகின்றது.

ஜெர்மனியக் கப்பல் ஒன்று ஒஸ்ரியா வந்து அங்கிருந்து உலகச்சுற்றுலா மேற்கொள்வதற்காக சென்ற போது ஐஸ் இல் உறைந்து கிடந்த ஒரு உடலை 1991 புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி ötztal Alps மலைத் தொடரில் கண்டெடுத்தனர். சுருங்கி வற்றிப்போன இந்த உடலை ஒஸ்ரியா பரிசோதனைக் கூடத்திலே வைத்து உலக மருத்துவர்கள் எல்லோரும் ஆராய்ச்சி செய்தபோது இந்த உடம்பானது கி.மு 3350 – 3105 காலப்பகுதி எனக் கண்டறியப் பட்டது. அத்துடன் அந்த உடலிலே 61 இடங்களில் பச்சை குத்தப்பட்டு இருந்தது. இது கண்டெடுக்கப்பட்ட இடம் இத்தாலிக்கு அருகாமையில் இருந்ததனால், இந்த உடல் எங்களுடையது என்று உரிமை கொண்டாடிய இத்தாலியர்கள், அந்த உடலை எடுத்துக் கொண்டு போய்த் தம்முடைய அருங்காட்சியகத்தில் வைத்துள்ளார்கள்.

இவ்வாறு உலகமெங்கும் பரந்து கிடக்கும் இந்தப் பச்சை குத்துதல் என்னும் கலை பழந்தமிழ் இலக்கியங்களிலே தொய்யில் என்று அழைக்கப்பட்டது. இந்தத் தொய்யில் அழிக்கக் கூடியது. சந்தனம், குங்குமம், செம்பஞ்சுக் குழம்பு, பச்சைக் கருப்பூரம் ஆகியவை தொய்யில் எழுதப் பயன்பட்ட மூலப்பொருட்களாகக் காணப்பட்டன. சித்திரங்கள் போன்ற உடலோவியம் வரையப்படும். காதலனோ கணவனோ கூடுதலுக்கு முன் பெண்ணின் மார்பின்மீதும், தோளின் மீதும் இத்தொய்யில் வரையும் மரபு அக்காலத்தில் இருந்தது.

நக்கீரனாரின் அகநானூற்றுப் பாடலில் தலைவிக்குப் பொட்டிட்டு, மலர்களின் மகரந்தத்தை மார்பில் அப்பி, தொய்யில் வரைந்து மலர் பரப்பிய படுக்கையில் பகற்பொழுதிலும் தலைவன் கூடியிருந்ததாகவுள்ளது. இப்பொழுதுபோல் அக்காலத்திலும் பல வண்ணங்களில் வரையப்பட்டிருந்தது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் மனைவியின் தோள்களில் இருந்த தொய்யில்; வெள்ளை நிறத்தில் இருந்ததாக நெடுநல்வாடையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களைத் தழுவுவதிலும்காண்பதிலும்நுகர்வதிலும் இன்பம் காணும் ஆண்கள் பலவகை நறுமணம் கலந்த தொய்யிலைப் பெண்கள் மார்பு, மேனிகளில் வரைவது வழக்கமாக இருந்தது.

கண்ணகியின் மார்பிலே அவளுடைய பணிப்பெண்கள் ஏன் பெரிய முத்து மாலையைச் சூட்டியுள்ளார்கள். தொய்யில் எழுதினால் போதுமே என்று ஓரிடத்தில் கோவலன் கூறுகின்றான்.

> ‘‘அரும் பொருள் வேட்கையின்
> உள்ளம் துரப்ப,
> பிரிந்து உறை சூழாதி ஐய!
> விரும்பி நீ,
> என் தோள் எழுதிய
> தொய்யிலும், யாழ நின்
> மைந்துடை மார்பில் சுணங்கும்,
> நினைத்துக் காண்:
> சென்றோர் முகப்பப்
> பொருளும் கிடவாது
> ஒழிந்தவர் எல்லாரும்
> உண்ணாதும் செல்லார்;
> இளமையும் காமமும்
> ஓராங்குப் பெற்றார்
> வளமை விழைதக்கது உண்டோ?
> உள நாள்,
> ஒரோஒ கை தம்முள் தழீஇ,
> ஒரோஒ கை
> ஒன்றன் கூறு ஆடை
> உடுப்பவரே ஆயினும்,
> ஒன்றினார் வாழ்க்கையே
> வாழ்க்கை அரிதுஅரோ,
> சென்ற இளமை தரற்கு!’’

காதலி காதலனுக்கு அறிவுரை கூறுகின்றாள். தண்ணீர் உண்ணத் தாகம் எடுப்பது போல, பொருள் தேட வேண்டும் என்னும் ஆசை துரத்துகிறது என்பதற்காக காதலனே என்னைப் பிரிந்து வாழ எண்ண வேண்டாம். விருப்பத்தோடு என் தோளில் தொய்யில் எழுதினாயே அதை எண்ணிப் பார். அது உன் மார்பில் கோடுகளாகப் பதிந்துள்ளது அதையும் எண்ணிப்பார். சென்றவர்கள் எல்லாம் கொண்டு வரப் பொருள் கொட்டிக் கிடப்பதில்லை. அதேபோல் பொருளீட்டாதவர்கள் உண்ணாமல்

28 ஆம் பக்கம் பார்க்க...








# ஆண்மை தவறேல்

காதலும் வீரமும் கொஞ்சி விளையாடும் சங்கத் தமிழ் தந்த வழி நின்று ஆண், பெண் என்ற அற்புத சொற்களுக்குள் கொண்டாடிக் கொண்டிருக்கிறது அகிலம். இதனைச் சார்ந்து ஆண்மை என்ற வார்த்தைக்கு பொருள் தேட முயன்றால் சற்றே கெடும். ஆண் என்ற உயிரியல் சார்ந்த தனிமனித குறிப்பில் இருந்து ஆண்மை என்ற பரந்த விழிப்புணர்வு வேறுபடுகிறது. அச்சம் தவிர் என்று ஆரம்பித்த மாத்திரத்திலேயே , பாரதியின் புதிய ஆத்திச்சூடியில் இரண்டாவது அடியாக வருகிறது' 'ஆண்மை தவறேல்' .

மையத்தில் சிம்மாசனமிட்டு 360 பாகைகளும் விரிந்து பரவிய பாரதியின் பார்வையில் 'ஆண்மை' என்ற ஒற்றைச் சொல்லில் பலவகைத் தன்மைகள் பரிமளிக்கின்றன.

**''பக்தியினாலே கல்வி வளரும் – பல**
**காரியம் கையுறும் வீரியம் ஓங்கிடும்**
**அல்லல் ஒழியும் – நல்ல**
**ஆண்மை உண்டாகும்''**

பக்தியினாலே கிடைக்கப்பெறுகின்ற மகத்தான விடயங்களுள் ஒன்றாக 'ஆண்மை' யை பட்டியலிடுகிறார் பாரதி. இதனால் ஆண்மை என்பது எத்தனை தூய்மையான உயரிய விடயம் என்ற முதல் படியை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.

**''அஞ்சேல் அஞ்சேல் என்று**
**கூறி எமக்கு நல்**
**ஆண்மை சமைப்பவனை**
**ஸ்ரீ பல வெற்றிகள்**
**ஆக்கிக் கொடுப்பவனை–**
**பெருந்திரள்**
**ஆகிப் பணிந்திடுவோம் – வாபீர்''**

அச்சம் தவிர்த்தால் ஆண்மை விளையும் என்று தீர்க்கமாக கூறும் அக்கினி பகவான் பாட்டின் அடிகளை நோக்குமிடத்து, அச்சம் இல்லாத இடத்தில் ஆண்மை கிடைக்கும் என்றால் , ஆண்மையை வீரம் என்று கருதலாமா ? என வினவத் தோன்றுகிறது . ஆமாம் பல வினாக்களை எழுப்பி விழிப்புணர்வைத் தந்து வினாக்களுக்கு தெளிவுற விடைகளையும் தந்து வினவக் கண் விழித்தவன் அல்லவா பாரதி.

**''தொல்லை தீர்த்து**
**உயர்வு கல்வி – வெற்றி**
**சூழும் வீரம் அறிவு**
**ஆண்மை கூடும்''**

என யோக சித்தியில் வரும் அடிகளை பார்க்கும் இடத்து வீரமும் ஆண்மையும் ஒன்றில்லை என்ற விடையும் கிடைக்கிறது .

**''நிதிமிகுந்தவர் பொற்குவை தாபீர்**
**நிதி குறைந்தவர் காசுகள் தாபீர்**
**அதுவும் அற்றவர்**
**வாய்ச்சொல் அருளீர்**
**ஆண்மையாளர்**
**உழைப்பினை நலகீர்''**

அப்போ ஆண்மையை வலிமை என்று கொள்ளலாமா ? இது வெறும் உடல் வலிமை அல்ல மன வலிமை . துன்பத்தையும் சோர்வையும் அச்சத்தையும் ஓட்டுகின்ற மன வலிமை .

**''துன்பம் என்னும் கடலைக்**
**கடக்கும் தோணி அவன் பெயர்**
**சோர்வென்னும் பேயை ஓட்டும்**
**சூழ்ச்சி அவன் பெயர்**
**அன்பென்னும் தேன் ஊறித்**
**ததும்பும் புதுமலர் அவன் பெயர்**
**ஆண்மை என்னும் பொருளைக்**
**காட்டும் அறிகுறி அவன் பெயர்''**

பாலகங்காதர திலகனை போற்றி பாடும் வாழ்க திலகன் நாமம் என்பதில் ஆண்மை என்னும் பொருள் என்ன என்று பாரதி கருதும் விடயத்தில் பெரும் உண்மை புலப்படுகிறது. துன்பம் என்பதை துறத்தலும், சோர்வு என்னும் பேயை துரத்தலும், அக்கணத்தில் பூத்த பொலிவோடு மின்னும் மலர் போல எக்கணமும் அன்பெனும் தேன் ஊறித் ததும்பும் தன்மையும் ஆண்மைக்கான அறிகுறிகளாய் முன்வைக்கிறார்.

**''அன்பளித்து விட்டாய் காளி**
**ஆண்மை தந்து விட்டாய் ''**

அன்பொன்றே தன் தொழிலாகி , மொழியாகி , மெய்யாகி, உயிராகி , உணர்வாகி, தெய்வமுமாகி கிடந்த பாரதியின் ஏகாந்தத்தில் ஆண்மை என்பதும் அன்பினதே.

**''மானம் வீரியம் ஆண்மை**
**நன்னேர்மை**
**வண்மை யாவும் வழங்குரைச்**
**செய்வேன்**
**ஞானம் ஓங்கி வளர்ந்திடச்**
**செய்வேன்**
**நான் விரும்பிய காளி தருவாள்''**

ஞானத் துணிவு கொண்ட தன்மை , பிறர் துயர் தீர்க்கும் தன்மை, வெற்றி தோல்விகளுக்கு அப்பாற்பட்ட தன்மை, மென்மையில் மேன்மையான தன்மை ஆண்மை. பக்தி, வீரம், செம்மை, தெளிவு, அறிவு, கல்வி, வல்லமை, வலிமை, உறுதி, தன்னம்பிக்கை, பொதுநலம், போன்றவற்றின் சேர்க்கையாய் பக்தியிலும், சித்தியிலும் , புத்தியிலும் சத்தியத்தை ஏற்றி நின்று நேர்மையாக இருக்கும் வீரம் ஆண்மை.

**சுருங்கக்கூறின் , பேரன்பாகி**
**இருத்தலே 'ஆண்மை'**
**''அன்பு கனிந்த கனிவே சக்தி**
**ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி''**

பாரதி வாழ்ந்த விடுதலை வேட்கை நிரம்பிய காலத்தில், அந்நியர் ஆட்சியில் தாய் மொழி மங்கிய காலத்தில் தமிழை உயிர்ப்பித்து ஓட்டம் அளித்து பாரத தேசத்திற்கும் பாமர மக்களுக்கும் யாவரும் சமம் என எண்ணற்ற உயிர் கவி தந்து , உலகத்தை தூக்கி நிறுத்தவல்ல நெம்புகோலாக எழுதுகோலை ஆக்கி பெண்மை வாழ்க என்று கூத்திட்ட பாரதியின் ஆண்மையை கண்டு வியந்து சொல்லத் தோன்றுகிறது 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்'.




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்



Sari1
Fashion House
Sari 1
நத்தார்,
புதுவருட
வாழ்த்துக்கள்
அனைத்து விதமான
ஆடைவகைகளையும்
மற்றும் புத்தம் புதிய டிசைன்களில்
தங்க நகைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
Taunus Straße 49, 60329 Frankfurt
0152 19239663




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
New Asialand
015201954064
www.newasialand.eu
உங்கள் அனைத்து மளிகை
தேவைகளுக்கும் ஒரே இடம்...
பசுமையான மரக்கறி வகைகள்
உடன் கடல் உணவுகள்
மளிகை பொருட்கள்
உடன் ஆட்டு இறைச்சி
பழவகைகள்
Taunus Straße 49, 60329 Frankfurt
Frankfurt (Main) Hauptbahnhof
முன்பாக 50 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது




**தடுப்பூசிகள் செலுத்திக் கொண்டவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கொரோனா மாத்திரைகளின் பயன்பாடு அவசரமாகத் தேவைப்படுகிறது எனவும், தடுப்பூசிகள் மிகக் குறைவான அளவில் செலுத்தப்பட்டுள்ள ஏழை மற்றும் நடுத்தர நாடுகளில் கொரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தித் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் வல்லுநர்கள் யோசனை கூறியுள்ளனர்.**

கு.கணேசன்
(இலங்கை)

# நம்பிக்கை தரும் கொரோனா மாத்திரைகள்






கொரோனாவுக்கு எதிரான போரில், உலக நாடுகள் தடுப்பூசிகளைப் பேராயுதமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில், இரண்டு வகை மாத்திரைகள் புதிய ஆயுதங்களாக வந்திருப்பது கொரோனா சிகிச்சையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மெர்க் நிறுவனம், ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள 'EIDD 2801' மாத்திரைக்கு பிரிட்டன் அரசு அவசரகாலப் பயன்பாட்டுக்கு அனுமதி அளித்துள்ளது. இது அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக் கப்பட்டது.

தற்போது கொரோனா தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் ரெம்டெசிவிர், டெக்சாமெத்தசோன், 'ஒற்றைப் படியாக்க எதிரணு மருந்து' (Monoclonal antibody) ஆகியவற்றின் வரிசையில் புதிதாக இந்த மாத்திரையும் சேர்ந்திருக்கிறது. 'மோல்னுபிரவிர்' (Molnupiravir) என்பது இதன் வணிகப் பெயர். பிரிட்டனில் இது 'லேகேவ்ரியோ' (Lagevrio) எனும் பெயரில் சந்தைப்படுத்தப்படுகிறது. முதன் முதலில் கொரோனாவுக்கு எதிராக வழங்கப்படும் வாய்வழி வைரஸ் மாத்திரை என்பது இதன் தனித்துவம்.

கொரோனா தடுப்பூசிக்கு முதன்முதலில் அனுமதி அளித்த நாடு பிரிட்டன்.ஆனாலும், அங்கு கொரோனா பெருந்தொற்றுப் பரவல் இன்னமும் நீடிக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அந்த நாட்டுக்கு இருக்கிறது. அதனால், இந்தப் புதிய மருந்துக்கு அனுமதி அளித்திருக்கிறது. இந்த வகையில் கொரோனா தொற்றுப் பரவல் ஏறுமுகத்தில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட உலக நாடுகளிடத்திலும் இது முக்கியத்துவம் பெற்றுவருகிறது. இந்தியாவில் இதைத் தயாரிக்கவும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

மோல்னுபிரவிர் மாத்திரை கொரோனா தொற்றைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்திவிடுவதால், தொற்றாளர்களை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறைப்பதிலும், அவர்களின் உயிரைக் காப்பதிலும் பெரும் பங்கு வகிக்கும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் மூன்று கட்ட ஆய்வுகளின்போது, மிதமான மற்றும் நடுத்தர பாதிப்பு ஏற்பட்ட கொரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரை வழங்கப்பட்டது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், உடற்பருமன், இதயநோய், நீரிழிவு போன்ற துணை நோய்களில் ஏதாவது ஒன்று காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களிடமும் ஆய்வு செய்யப்பட்டதில், இந்த மாத்திரை தொற்றாளர்களின் இறப்பு விகிதத்தை 50மூ குறைத்திருக்கிறது. 29 நாட்கள் அவர்களைத் தொடர்ந்து கவனித்த அளவில் இந்த மாத்திரை வழங்கப்பட்டவர்களில் யாரும் மரணமடையவில்லை எனவும், பொய் மாத்திரை (Placebo) வழங்கப்பட்டவர்களில் 8 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில் மோல்னுபிரவிர் மாத்திரையின் பாதுகாப்புத் தன்மையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும், கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத தொற்றாளர்களிடம் இது ஆய்வு செய்யப்பட்டதால், இதன் நம்பகத்தன்மையும் உறுதியாகியுள்ளது. இது கர்ப்பிணிகளிடம் ஆய்வு செய்யப்படவில்லை என்பது மட்டுமே குறை.

## எப்படி வேலை செய்கிறது?

வழக்கத்தில், தொற்றாளரின் செல்களில் கொரோனா வைரஸ் வேகவேகமாக நகலெடுத்துப் பெருகி வளரும் குணமுடையது. மோல்னுபிரவிர் மாத்திரை கொரோனா வைரஸின் மரபணு வரிசையில் நகலெடுக்க உதவுகிற முக்கியமான நொதிகளை மாற்றியமைத்துப் பல்வேறு பிழைகளை உண்டாக்கிவிடுவதால், எப்போதும்போல் நகலெடுப்பதில் கொரோனா வைரஸக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதன் நகலெடுப்பு வேகம் குறைந்துவிடுகிறது. உடலில் வைரஸ் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுகிறது. இப்படி, கொரோனா தொற்று ஆரம்பத்திலேயே அடங்கிவிடுகிறது.

கொரோனா வைரஸிடம் இதுவரை காணப்பட்ட காமா, டெல்டா, டெல்டா பிளஸ், மியூ என எல்லா வகை வேற்றுருவங்களின் தொற்றையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மோல்னுபிரவிர் மாத்திரைக்கு உள்ளது என்பது கூடுதல் நன்மை. உலக அளவில் 53 லட்சம் பேரை பலிவாங்கியிருக்கும் கொரோனா தொற்றை முடிவுக்குக் கொண்டுவர இது ஓர் அருமருந்தாக அமையும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர்.

18 வயதுக்கு மேற்பட்ட, ஏதேனும் ஒரு துணைநோயுள்ள கொரோனா தொற்றாளருக்கு அறிகுறிகள்

26 ஆம் பக்கம் பார்க்க...






சேவியர்
(தமிழ்நாடு)

# ஏட்டுக்கல்வியை மாற்றும் காலம்!

கோவை மாணவி ஒருத்தி மன உளைச்சலின் உச்சத்தில் போய் தற்கொலை செய்து கொண்ட நிகழ்வு இன்னும் இதயத்தை பாரமாகவும், விழிகளை ஈரமாகவும் வைத்திருக்கிறது. வாழ்க்கையை அதன் வசீகர வீதிகளில் சந்திக்க வேண்டிய ஒரு பதின் வயதுப் பெண், ஒரு துயரத்தின் இருட்டறைக்குள் மறைந்து போனதை ஏற்றுக் கொள்ள மனம் மறுக்கிறது.

தற்கொலை தீர்வு அல்ல! என்பதை நாம் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தாலும், தீர்வுகளே இல்லை என மக்கள் நினைக்கும் போது தற்கொலையைச் சார்ந்து விடுகிறார்கள் எனும் துயரம் மனதை உடைக்கிறது. பெண்களற்ற உலகத்திலிருந்து யாரும் பிறக்கவில்லை. பெண்களற்ற உலகில் யாரும் வாழவில்லை. எனில், பெண்கள் மட்டும் ஏன் இத்தகைய கடும் சிக்கல்களைத் தொடர்ந்து சந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள் ?

‘‘ஒரு பெண் நள்ளிரவில் சாலையில் தனியாய் அச்சமின்றி நடந்து போகவேண்டும்’’ என ஆசைப்பட்ட தேசத் தந்தையின் கனவு, இன்றைக்கு, ஒரு மாணவி அச்சமின்றி வகுப்பறையைக் கடந்து வரவேண்டும் என மாறியிருப்பது பலவீனத்தின் உச்சமன்றி எதுவுமில்லை. மாதா, பிதா, குரு, தெய்வம் என கருத்தூட்டி வளர்க்கப்பட்ட சமூகத்தில் இத்தகைய நிகழ்வுகள் நடப்பதை என்னென்பது ?

ஒரு வலிமையான சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் பாலின சமத்துவம் மிக முக்கியமானது. அதே போல மாணவர் சமூகத்திற்கு நல்ல வலிமையான மனநிலை இருக்க வேண்டியதும் அவசியமானது.

பெண்களை வீடுகளில் எப்படி மதிக்கிறோம், எப்படி நடத்துகிறோம் என்பதை வைத்தே நமது சமூக அணுகுமுறைகளும் இருக்கும். சிறு வயதிலிருந்தே பெண்களை கீழாக நினைப்பதும், அவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்பு கொடுக்காமல் இருப்பதும், அவர்களது சிந்தனைகளை கேலி செய்வதும், அவர்களது பங்களிப்புகளைப் புறக்கணிப்பதும் என பெண்களுக்கு எதிராகவே இருந்தால், அந்த குடும்ப சூழலில் இருந்து வருகின்ற ஆண்கள் சமூகத்தில் பெண்களையும் அப்படியே பாவிப்பார்கள். இதில் மாற்றுக் கருத்தே இல்லை. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது கிழமொழி அல்ல, வாழ்வின் மொழி.

ஒரு சமூகம் நல்ல முறையில் கட்டியெழுப்பப்பட வேண்டுமெனில் ஒவ்வொரு குடும்பமும் பெண்களை கண்ணியமாகவும், அன்பாகவும், மரியாதையுடனும், தன்னம்பிக்கையுடனும் வளர்த்த வேண்டும். எந்த விதமான வேறுபாடுகளும் காட்டக் கூடாது. நமது மத, ஆன்மிக,தத்துவ சித்தாந்தங்கள் அவற்றுக்கு தடையாய் இருக்குமெனில் அதை உதறவும் தயங்கக் கூடாது. எப்படி ஒரு தாயை நேசிக்கிறோமோ, அப்படியே எந்த ஒரு பெண்ணையும் நேசிக்கப் பழக வேண்டும். அதற்கு முதல் தேவை சிறு வயதிலிருந்தே பெண்களை மதிக்கக் குடும்பங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பெண்களுக்கு எதிரான எந்த ஒரு சிறு தவறும் மாபெரும் பிழை எனும் உணர்வை சிறு வயதிலிருந்தே ஒவ்வொருவரும் உணர வேண்டும். அத்தகைய பயிற்சியையும், கல்வியையும் நாம் உருவாக்க வேண்டும். பெண்கள் இளக்காரமானவர்கள், வலிமையற்றவர்கள் எனும் சிந்தனை எங்கே வருகிறதோ அங்கே தான் சிக்கல்கள் பெருமளவில் உருவாகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஆதரிப்பவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என சட்டம் சொல்ல வேண்டும். அவர்கள் தான் குற்றம் செய்யத் தூண்டுபவர்கள். குற்றவாளிகளுக்குக் கவசமாய் இருப்பவர்கள். அத்தகைய புல்லுருவிகளை முழுமையாய் அகற்ற வேண்டும்.

இன்றைக்கு கணினி நிறுவனங்கள் POSH போன்ற Sexual harassment Training விழிப்புணர்வு பயிற்சிகளை கட்டாயமாக்கியிருக்கின்றன. பெண்களுக்கு எதிரான சிறு குற்றமும் மிகப்பெரிய விளைவுகளை உருவாக்கும் எனும் அச்சத்தை ஊழியர்களிடம் எழுப்பியிருக்கின்றன. அலுவல் நேரமானாலும் சரி, மற்ற நேரங்களானாலும் சரி பெண்களை தவறாய் நடத்துவதோ, பேசுவதோ, தொடுவதோ, கிண்டல் செய்வதோ எல்லாமே விசாரணை வளையத்துக்குள் வருகிறது. இது அலுவலகங்களில் புரையோடிப் போயிருந்த அழுக்கை பெருமளவு அகற்றியிருக்கிறது.

இத்தகைய கட்டமைப்புகள் பெண்கள் தங்களுடைய பிரச்சினைகளை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேச தைரியத்தைக் கொடுக்கின்றன. அவர்களுக்கான முழுமையான பாதுகாப்பை நிறுவனங்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. தவறு செய்யும் ஊழியர்கள் எத்தனை பெரிய பதவியில் இருந்தாலும் பாரபட்சம் இல்லாமல் நீக்கப்படுகின்றனர். இத்தகைய கடுமையான அமைப்புகள் நிச்சயம் கல்வி நிலையங்களில் இருக்க வேண்டும்.

மாணவிகளோ, மாணவர்களோ தங்களுடைய பிரச்சினைகளின் ஒரு வரியைச் சொன்னாலே அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, தேவையான உதவிகளைச் செய்கின்ற அமைப்புகள் நிச்சயம் வேண்டும். மாணவர்களுக்கு ஒரு நல்ல மனமகிழ்ச்சியான கல்விச் சூழலை கல்வி நிறுவனங்கள் வழங்க வேண்டும். எக்காரணம் கொண்டும் மாணவர்களை மிரட்டுவதோ, அவர்களைப் பற்றி பிறரிடம் சொல்வதோ, அதைப் பேசு பொருளாக்குவதோ தவிர்க்கப் பட்டே ஆக வேண்டும். ■

17 ஆம் பக்கம் பார்க்க...



முக்கியமாக, இன்றைய மாணவ சமூகம் சிலவற்றை மனதில் கொள்ள வேண்டும்.

1. உங்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற எந்த ஒரு வன்முறைக்கும் வெட்கப்பட வேண்டியது நீங்களல்ல. அவமானப்பட வேண்டியது நீங்களல்ல. தோற்று செத்துப் போக வேண்டியது நீங்களல்ல. நீங்கள் துணிச்சலின் வாரிசுகள். நிமிர்ந்து நிற்க வேண்டியவர்கள். நீங்கள் நிமிர்ந்தால் தவறிழைக்கும் கோழைகள் தலைகுறுகிப் போவார்கள். எனவே தற்கொலை எனும் முடிவை எடுக்கவே எடுக்காதீர்கள், அது உங்களை குற்றவாளி என நீங்களே முடிவு கட்டுவதைப் போன்றது.

2. ஒருவேளை நீங்களே தவறிழைத்திருந்தால் கூட அச்சமில்லை. உங்களுக்கான பாதுகாப்பை சட்டம் வழங்குகிறது. பிறருடைய மிரட்டலுக்கோ, எச்சரிக்கைக்கோ நீங்கள் செவிசாய்க்க வேண்டிய தேவை இல்லை. வீழ்தல் மனித இயல்பு, எழுதலே மனித மாண்பு. சமூக வலைத்தளங்களோ, ஊடகங்களோ உங்களை அவமானப்படுத்தி விட முடியாது. அத்தகைய மிரட்டல் விடுப்பவர்களை முழுமையாய் உதாசீனம் செய்யுங்கள்.

3. ஆசிரியர் என்பவர் கடவுள் அல்ல ! என்ன செய்தாலும் ஆசிரியருக்கு அடிபணிந்திருக்க வேண்டும் எனும் முட்டாள் தனமான சிந்தனையை துடைத்தெறியுங்கள். தவறு செய்பவர் ஆசிரியரோ, தலைமை ஆசிரியரோ யாராய் இருந்தாலும் நேருக்கு நேர் குரல் கொடுக்கும் துணிச்சலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

4. நல்ல நண்பர் படையைக் கொண்டிருங்கள். நல்ல பாசிடிவான சிந்தனைகளை விதைக்கின்ற நண்பர்கள் மிக மிக முக்கியம். உங்களை அவமானப்படுத்த ஒருவர் இருந்தால் உங்களை பெருமைப்படுத்த பலர் இருக்கிறார்கள் எனும் நம்பிக்கை உங்களுக்குள் முழுமையாய் இருக்கட்டும்.

5. பெற்றோரை முழுமையாய் நம்புங்கள். அவர்களே உங்களுக்கான வாழ்க்கையை உருவாக்குபவர்கள். அவர்களே உங்களின் வாழ்க்கை மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள். எந்த பிரச்சினை என்றாலும் முதலில் அவர்களிடம் சொல்லுங்கள். எதையுமே மறைக்காதீர்கள், உங்கள் தவறுகள் உட்பட. பெற்றோரின் கோபம் சிற்பியைப் போன்றது, உங்களை வனைய வேண்டும் எனும் ஆதங்கத்தின் வெளிப்பாடு. அந்த கோபத்தைத் தாண்டி உங்களுக்காய் உயிரைக் கொடுப்பது அவர்கள் மட்டும் தான் என்பதைக் கல்வெட்டாய் மனதில் எழுதுங்கள்.

# ஏட்டுக்கல்வியை மாற்றும் காலம்!

6. பிறருடைய விமர்சனங்களைத் தூக்கி குப்பைத் தொட்டியில் போடுங்கள். அடுத்தவன் சொல்வதல்ல நாம் ! அடுத்தவனின் விருப்பத்துக்கு வாழ்வதற்கல்ல நமது வாழ்க்கை. இது எனது வாழ்க்கை. இதை நான் வாழ்வேன். இதை அழித்துக் கொள்ள மாட்டேன். எவன் என்ன சொன்னாலும் நான் நானாய் வாழ்வேன் எனும் உறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

7. எனது உடலுக்கான உரிமை எனக்கு மட்டுமே உண்டு ! அதை தொடவோ, கிண்டல் செய்யவோ, தவறாய் சித்தரிக்கவோ எவனுக்கும் உரிமையில்லை எனும் உத்வேகத்தை மனதில் எழுதுங்கள். உங்களை விட வலிமையானவர் உலகில் இல்லை என்னும் உண்மையை உணருங்கள்.

8. பிடிக்காத சூழலையோ, பிடிக்காத உறவுகளையோ, பிடிக்காத நட்புகளையோ வெட்டி எறிய தயவு தாட்சண்யம் பார்க்காதீர்கள். உங்கள் வாழ்க்கைக்குள் வந்து அரசாட்சி செய்ய யாருக்கும் உரிமையில்லை. உங்களுடைய வாழ்க்கையில் களைகளைக் களைவதில் பயப்படவே வேண்டாம்.

9. இந்த உலகில் எல்லாமே கடந்து போகும். எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள். எல்லாம் சில நாட்கள் பேசுபொருட்களே. அனைத்தையும் மன உறுதியுடன் கடந்து செல்ல துணிச்சலை வளர்த்துக் கொள்ளுங்கள். இதே நிலை அடுத்த ஆண்டு இருக்கவே இருக்காது, உங்கள் வாழ்க்கையை தொலைநோக்குப் பார்வையில் பாசிடிவ் ஆக பாருங்கள்.

10. மனதை மடை மாற்ற ஒரு சிறந்த, உங்களுக்குப் பிடித்தமான ஒரு பொழுதுபோக்கை உருவாக்கிக் கொள்ளுங்கள். தேவையான வேளைகளில் டிஜிடல் உலகை விட்டு தள்ளியே இருங்கள். சமூக ஊடகங்களும், வலைத்தளங்களும் மாயையை உருவாக்குகின்றன. உண்மையான உலகம் டிஜிடல் வெளிக்கு வெளியே விரிந்து கிடக்கிறது. மாணவ மாணவியரே,நீங்களே இந்த பூமியின் நம்பிக்கை விளக்குகள். இருட்டைப் போர்த்தாதீர்கள். வெளிச்சத்தை வினியோகியுங்கள். நீங்கள் ஒளிர்ந்தால், கோழைகள் ஓடி ஒளிவார்கள். ■



## நெருக்கடிகளின் நடுவே விடிவெள்ளி

*கிறிஸ்மஸ்,நெருக்கடிகளின் காலத்தில் நம்பிக்கையின் விடிவெள்ளியாய் நம்மிடம் வருகிறது. உலக மக்களுக் கெல்லாம் நற்செய்தியாய் வந்தது தான் கிறிஸ்து பிறப்பின் செய்தி. பெருந்தொற்று காலம் நமது முதன்மைகளை மாற்றியமைத்திருக்கிறது. பணத்துக்கான ஓட்டம் மிதமாகி, உயிருக்கான பாதுகாப்பு வேகமெடுத்திருக்கிறது.*

*இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் 'அஞ்சாதீர்கள்' எனும் செய்தியை இன்றைய உலகம் எதிர்பார்க்கிறது. ஆனால், வெறும் வார்த்தைகள் இன்றைக்கு நற்செய்தியாய் மாறுவதில்லை.செயல்கள் மட்டுமே நற்செய்தியாய் நிலைக்கின்றன. விசுவாசம் கொள் எனும் வார்த்தையல்ல, விசுவாசம் கொள்ள வைக்கும் வாழ்க்கையே இன்றைக்குத் தேவையாகிறது.*

*அயலானுக்கு அன்பு (ஒரு மனிதன் நிராயுதபாணியாய், பிறரின் தேவைக்காய்க் காத்திருக்கும்போது தேவைப்பட்டது குருவின் பிரார்த்தனையல்ல, லேவியின் பரிதாபமல்ல மாறாக,அன்பின் தொடுதல். பரிவின் உதவி. நமது கரங்கள் நீளாதவரை, நமது நாவு நீள்வதில் பயனில்லை. இயேசுவை நம்பு என்பதிலல்ல, இது தான் இயேசுவின் அன்பு - என்பதில் தான் உண்மையான நற்செய்தி அடங்கியிருக்கிறது.*



*ஆறுதலின் பண்பு (இழப்புகளைச் சந்தித்திருக்கும் மக்களிடம் போய் ஆறுதலாய்ப் பேசிவிட்டு வந்தாலே அவர்கள் புரிந்து கொள்வார்கள், 'இதுவே கிறிஸ்துவின் இயல்பு' என்பதை. சொல்கின்ற வார்த்தைகளை விட, சொல்லாத செயல்களே அதிகம் பேசுகின்றன. அதனால் தான் இயேசு சொன்னார், 'நீங்கள் என் சீடர்கள் என்பதை உங்கள் கனிகளால் தெரியப்படுத்துங்கள்'.*

*மீண்டெடுக்கும் வாய்ப்பு. (அழிந்து போனதைக் கட்டியெழுப்பும் வாய்ப்பினை நெருக்கடிகளின் காலம் நமக்குத் தருகிறது. இந்த காலத்தில் கூட நமது உதவிகளும், பரிதாபங்களும், செயல்களும் - சாதி, மத, இன, எல்லைகளில் உலவினால் நமது கிறிஸ்தவ வாழ்க்கை மிகப்பெரிய போலித்தனம் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். அன்பினை வளர்க்கும் நெருக்கடிகள் (இந்த நெருக்கடியும் அன்பின் விதைகள் வேகமாய் வளர துணை செய்கின்றன. அதிசயங்களை கடவுள் எப்போதும் தானே வந்து செய்வதில்லை, மனிதர்களைக் கொண்டே செயல்படுத்துகிறார். அந்த மனிதராய் நாம் இருக்கும்போது நேசத்தின் கிளைகளை நாம் வளரச் செய்கிறோம் என்று அர்த்தம்).* ■

**சேவியர்** (தமிழ்நாடு)





எண்ணப் பரவலாக்கம்

# மரக்கொப்பை ஒருபோதும் நம்பி வாழாத பறவைகள்

கடந்த இரண்டு வருடங்களாகவே கோவிட் 19 மனித குலத்தைப் பூச்சாண்டி காட்டி வருகிறது. 5 மில்லியனுக்கும் மேற்பட்ட இறப்புகளை ஏற்படுத்தி இன்னும் அடங்காமல், 'அந்த நாட்டில் குறைகிறது.இந்த நாட்டில் கூடுகிறது.புதிய 'மாறி' வீரியத்துடன் வந்துவிட்டது' என்று தன்னைப்பற்றியே மனித இனம் எப்போதும் நினைக்கும் நிலையை உருவாக்கி வலம் வந்துகொண்டிருக்கிறது. அது உருவாக்கப் போகும் நீண்ட காலப் பின்விளைவுகள் பற்றி ஒருவருக்கும் தெரியாது. ஆயினும் சமூக விலங்கான மனிதரைத் தனிமைப்படுத்தி அது ஏற்படுத்தியிருக்கும் உளத்தாக்கம் பற்றிப் பல ஆய்வுகள் வரத் தொடங்கிவிட்டன.

மரக்கொப்பில் ஆனந்தமாக அமர்ந்திருக்கும் அந்தப் பறவையைப் பாருங்கள். கொப்பு முறிந்துவிடும் என்று ஒருபோதும் அது பதற்றப்பட்டதுமில்லை. வேதனைப் பட்டதுமில்லை. ஏனெனில் அது மரக்கொப்பை ஒருபோதும் நம்பி வாழ்ந்ததில்லை. தன் சொந்த இறக்கைகளையே நம்பியிருக்கிறது. கொப்பு முறிந்தால் இலகுவாக வேறோரிடம் மாறிவிடும்.நோய் வந்தாலும் மருத்துவர்களையோ, மருந்துகளையோ,வக்சீன்களையோ நம்பியதில்லை. அடிப்படைத் தேவைகளும் தானும் என்று இயல்பாக வாழ்ந்துவிட்டுப் போய்விடும்.

மகாத்மா காந்தியின் வாழ்வு பற்றி எழுதுகிற மு.வ அவர்கள் பின்வருமாறு கூறுவார். 'என்ன இடையூறு வந்தாலும் தளராமல் என்ன வரினும் வருக என்று அஞ்சாமல் வாழ்வதே வாழ்க்கை' மனிதனோ கூர்ப்பின் உச்ச விலங்கு. மூளையின் அபரிமித விருத்தி காரணமாகப் பல விடயங்களைக் கண்டுபிடித்தான்.பேராசைப் படுகிறான் பயன் படுத்துகிறான். உளவியலிலும் பலவிடயங்களைப் புதிது புதிதாக அறிந்திருக்கிறான்.

மிகக் கஷ்டமான நிலைமைகளில் பயன்படக்கூடிய முதலுதவி முறைகளில் சில இவை.

**1.உடல் வெப்பநிலையைக் குறைத்தல்.**
**2.உடலுக்கு அதிக வேலை கொடுத்தல்.**
**3.ஆழ்ந்த சுவாசப் பயிற்சி செய்தல்.**
**4.தசைத் தளர்வுப் பயிற்சி செய்தல்.**

நெருக்கீடு கூடிய ஒரு காலகட்டத்தில் சொல்லக்கூடிய அல்லது நினைக்கக் கூடிய வசனங்களாகச் சிலவற்றைப் பார்க்கலாம்.

- **இப்போது நான் பாதுகாப்பாக இருக்கிறேன்**
- **இந்தநிலை எப்படியோ மாறும் என்று தெரியும்**
- **எனக்குள் இப்போது நடப்பது - இந்த எண்ணங்கள்,உணர்வுகள் - மிக இயல்பான நெருக்கீட்டுஎதிர்த் தாக்கம் மட்டுமே.**
- **எனது உயிருக்கு இப்போது எந்த ஆபத்தும் இல்லை**
- **நான் சுவாசிக்கப் போதிய வளி இருக்கிறது இப்போது**

இப்படி வலிந்து நேர் எண்ணங்களை வரவழைத்துக் கொண்டாலும் மறை எண்ணங்கள் தாமாக விரைந்து ஓடி வரத்தான் செய்யும். அவற்றை எடுத்துக் கையாள்வது நரம்புத் தொகுதியின் வேலைதானே !.அப்படியானால் அந்த மறை எண்ணங்களை என்னதான் செய்யலாம்? அவற்றைப் பரவலடையச் செய்யலாம். உதாரணமாக 'என்னால் எதுவும் முடியாது' என்பது எண்ணமாயின் முதலில் அந்த வசனத்திற்கு ஒரு மெட்டுப் போட்டுப் பாடிக்கொண்டு திரியலாம்.காலப் போக்கில் அதை 'என்னால் எதுவும் முடியுமே' என்று மாற்றிப் பாடிப் பார்க்கலாம் குறிப்பிட்ட எண்ணத்துக்குப் பெயர் வைப்பதும் அப்பெயரால் அழைப்பதும் இன்னொருவழி.மேலே சொல்லப்பட்ட எண்ணத்துக்கு 'முடி' என்று பெயர் வைக்கலாம்.

**'முடி' இப்போது என் மனதில் வந்திருக்கின்றார்.**

அந்த எண்ணம் வரும் நேரங்களை அடையாளம் கண்டு, 'முடி' இப்போது என் மனதில் வந்திருக்கின்றார் என்று நினைத்துச் சிரித்துக் கொள்ளலாம். அதே எண்ணத்தை ' புதிதளித்தல்' முறையில் நாடகமாக்கலாம். வெவ்வேறு விலங்குகளின் ஒலிகளோடு குறித்த வசனத்தை இணைத்துச் சொல்லி ரசிக்கலாம்.இவ்வாறெல்லாம் செய்யும்போது எண்ணம் செறிவும் வலிமையும் குறைந்து பரவலடைந்துவிடும்.



**கோகிலா மகேந்திரன் (இலங்கை)**

கடந்த காலத்தில் எம்மால் முடியுமாயிருந்த சிறுசிறு விடயங்களை எண்ணிப் பார்க்கலாம் .பின்னர் முடியாது என்று நினைத்ததைச் சிறு சிறு இலக்குகளாக்குவோம்.அவற்றை மெதுவாகச் செய்து முன்னேறும்போது எம்முடனே மட்டும் எமது ஒப்பீடுகளை வைத்துக்கொள்வோம். கடந்தகாலச் செயற்பாடுகளில் எமக்கு உதவியோருக்கு மனம் திறந்து நன்றி சொல்வோம் இவை எல்லாம் கோவிட் கால உள ஆரோக்கிய மேம்பாட்டில் உதவும். செய்துதான் பார்ப்போமே!

# நினைவாஞ்சலி

## அமரர் கமலாம்பிகை மகேந்திரமூர்த்தி

**மலர்வு: 31.07.1955 | மறைவு: 04.12.2020**



அன்பின் திருவுருவே
ஆண்டொன்று ஆனதம்மா
அழுதவிழி காயவில்லை
மீண்டும் உன் முகம் காணா
வேதனையில் துடிக்கின்றோம்!
அன்பும் அரவணைப்பும்
அளித்தெம்மைக் காத்திட்ட
தெய்வத்தாய் உந்தன்
திருமுகத்தைத் தேடுகிறோம்!
என்றென்றும் எம்மருகே
இருந்தெம்மைக் காத்திடுக
இறைவன் திருவடியில்
இளைப்பாறி அமைதி கொள்க!

**உங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்**
**கணவர், பிள்ளைகள், மருமகள்,**
**பேத்தி மற்றும் உற்றார் உறவினர்கள்.**

Mr.S.Mahendramoorthy, Kölnerstr.4 ,
28325 Bremen, Germany.
Tel. 0421 477821, 0176 290 950 33

ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
R.Ragunathan
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்.
TEMPO VALUTRANS Ria MoneyGram
துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven




# நமது பூமி எதிர்த்திசையில் சுழன்றால் என்ன நடக்கும்?




நமது பூமி தோன்றிய நாள் முதல் இன்று வரை மேற்கிலிருந்து கிழக்கை நோக்கிச் சுழன்றுகொண்டு இருக்கிறது. இதே பூமி திடீரென்று அதன் சுழற்சியை எதிர்த்திசைக்கு மாற்றிவிட்டால், அதாவது கிழக்கிருந்து மேற்கை நோக்கிச் சுழன்றால் என்ன நடக்கும்? அதனால் நம் பூமியில் வாழும் உயிரினங்களுக்கு ஏதும் பாதிப்பு இருக்குமா?

ஒன்றை மட்டும் ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகின்றேன். இவ்வாறு நமது பூமி தனது சுழற்சியை எதிர்த்திசைக்கு மாற்றி விட்டால், நமது பூமி அடையாளமே காணாதவாறு மாறிவிடும். அது ஏன் என்பதைப் பார்ப்பதற்கு முன்பு, நமது பூமி அதிவேகத்துடன் தன்னைத் தானே சுற்றி வருகின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? 460 m/s அதாவது ஒரு நொடியில் மட்டுமே 460 மீட்டர் அல்லது ஒரு மணி நேரத்தில் 1.656 கிலோ மீட்டர் சுற்றி வருகின்றது. இவ்வாறு வேகமாகச் சுற்றும் பூமி திடீரென்று தனது திசையை மாற்றி எதிர்த்திசையில் சுழன்றால் விபரீதமான சூறாவளிகளும், பேரலைகளும் ஏற்படக்கூடும். இந்த இயற்கைப் பேரழிவைத் தாங்கி நிற்கப் பூமியின் மேற்பகுதியில் எதற்கும் சக்தி கிடையாது. அதாவது கட்டடங்கள், உயிரினங்கள் போன்று அனைத்தும் உடனடியாக அழிந்துவிடும். அவ்வளவு தான். கதை முடிந்துவிடும்.

சரி, தற்போது பூமியின் சுழற்சியின் திசை மாறினால் அழிவு நிச்சயம் என்பது புரிந்திவிட்டது. ஆனால் நமது கற்பனையைச் சற்று தூண்டித் தான் பார்ப்போமே? நமது பூமி, தோன்றிய காலத்திலிருந்தே மேற்கிலிருந்து கிழக்கை நோக்கிச் சுழலாமல் கிழக்கிருந்து மேற்கை நோக்கிச் சுழன்றிருந்தால் எப்படி இருந்திருக்கும்? இது மிகவும் சுவாரசியமாக இருந்து இருக்கும். ஏன் தெரியுமா? சூரியனும் சந்திரனும் மேற்கில் தோன்றி கிழக்கில் மறைந்திருக்கும். இதைத் தவிர்த்து நமது பூமி இன்னும் பச்சைப் பசேலென்று இருந்திருக்கும். இதற்குக் காரணம் பரந்து காணப்படும் சமுத்திரங்கள் தான். இவை நமது பூமியின் காலநிலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க, குறிப்பாகச் சூரியனின் வெப்பத்தைப் பூமி முழுவதும் பரவ உதவும். பூமியின் சுழற்சி மாறினால் சமுத்திரங்கள் அசையும் திசைகளும் முற்றிலும் மாறி சூரிய வெப்பத்தை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லும். உதாரணத்திற்கு தற்போது காணப்படும் பாலைவனங்கள் பிரேசில் மற்றும் தென் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இடம் மாறிவிடும். தொடர்ந்து மேற்கு ஐரோப்பாவில் இருக்கும் நாடுகள் மிகவும் குளிரான நாடுகளாகி விடும். இதுவே ரஷ்யா வெப்பம் கூடிய நாடாக மாறிவிடும். அது மட்டும் இல்லாமல் நமது காற்று மண்டலத்தில் காணப்படும் இரசாயன பொருட்களின் அளவு வேறுபட்டு இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. இதன் விளைவால் பூமியில் உயிரினங்கள் தோன்றுவதற்கான முன் நிபந்தனைகள் இல்லாமல் கூட இருந்திருக்கலாம். ஆகவே ஒரு சிறிய மாற்றம் எவ்வாறு ஒரு பெரிய விளைவை ஏற்படுத்தியிருக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கிறது. இது சுவாரசியமாக இல்லையா?







Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

நண்பர்களே, எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது, எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும் என்பது போல் நமது பூமி எவ்வாறு தோன்றியதோ, அதனால் தான் நீங்கள் இன்று இந்த உலகில் வாழ்ந்து நான் எழுதிய இந்தக் கட்டுரையைப் படித்துக்கொண்டிருக்கிறீர்கள். அன்று மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால், நாம் அனைவரும் தோன்றியிருப்போமா என்பதே கேள்விக்குறியாகி விட்டிருக்கும்.

Wuppertal நகரில்...
Asia Lebensmittel
மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மரக்கறி வகைகளுக்கும் | கடல் உணவு வகைகளுக்கும் | இன்றே நாடுங்கள்
+49 176 62728598 | 020289012114
Asia Lebensmittel Getränke Tabak Süßigkeiten
Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

Hesen மானிலத்தில்
வீடு விற்பனைக்கு!
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
FOR SALE
Hesen மானிலத்தில் வீடு விற்பனைக்கு உண்டு.
5 அறைகள், 1 கடை, 2 லாகர், 1 தோட்டம், 5 வாகனத் தரிப்பிடம், எல்லாம் 1000 $Qm^2$ பரப்பளவு கொண்டது. புகையிரத நிலையத்தில் இருந்து 7,8 நிமிட நடைத்தூரம் மட்டுமே!
1,37,000 €
தொடர்புகளுக்கு: (49)1738085 475




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# ஆமை புகுந்த வீடும், இனவாதம் பிடித்த நாடும்



பண்டாரநாயக்கா, ஜே.ஆர்., சிறிமா, ராஜரட்ணம்



எழுபதுகளில் தமிழ் இளைஞர்கள் தனி நாடு ஏன் கேட்டார்கள் என்பதற்கான காரணத்தை அறியாத அல்லது அறிய விரும்பாத இளம் தலைமுறைக்கு இந்த தலையங்கம் கன பாடங்களை சொல்லித் தரும். இப்படி ஒரு தலையங்கத்தை பார்த்தபோது எனக்குள் ஏற்பட்ட எண்ணக்கருத்தே இக்கட்டுரையாகும்.

1948ல் காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனையே ஆட்சியாளர்களை நிர்ணயிக்கும் பிரதான மூலகாரணியாகியது.

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் ஆளும் ஐதேகவில் இருந்து பிரிந்து வந்த SWRD பண்டாரநாயக்க 1957ல் ஆட்சிக்கட்டிலேற எடுத்த ஆயுதம் பொருளாதார வளர்ச்சியல்ல, ஆட்சியேற்றதும் 24 மணித்தியாலங்களில் சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்குவேன் என்ற அறைகூவல் தான்.

சிங்கள இனவெறி அலையில் ஆட்சியை பிடித்தத்தும், பண்டா தமிழர்களிற்கும் முழு நாட்டிற்கும் தான் இழைத்து விட்ட பெருந்தவறை உணர்ந்து, தந்தை செல்வாவுடன் அதிகாரப் பரவலாக்கலிற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். உடனே ஐதேகவின் JR ஜெயவர்தன அதற்கு எதிராக கிளர்ந்தெழுந்து கண்டிக்கு யாத்திரை போய் அந்த ஒப்பந்தத்தை கிளிந்தெறிய வைத்தார்.

பிறகென்ன, ஐதே.க.வும் சு.க.வும் மாறி மாறி சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளில் சவாரி செய்து, தமிழர்களை அடக்குவதில் கவனம் செலுத்தி, பிரிட்டிஷார் விட்டுச் சென்ற நாட்டின் சிறந்த சமூக பொருளாதார அடித்தளத்தையே ஆட்டம் காண வைக்கத் தொடங்கினார்கள்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 17 ஆண்டுகளிற்கு பின்னர் விடுதலையடைந்தது இலங்கைக்கு அண்மித்த குட்டித் தீவான சிங்கப்பூர். சிங்கப்பூர் சுதந்திரம் அடையும் போது அதன் நிலைமை படுகேவலம். சிங்கப்பூரை இலங்கையை போல் ஆக்கிக் காட்டுகிறேன் என்று தான் சிங்கப்பூரின் அதிபர் லீ குவான் யூ சபதமெடுத்து ஆட்சிக் கட்டிலேறினார். சிங்களத் தலைவர்களை போலல்லாமல், மலாய், தமிழ், ஆங்கிலம், சீனம் என்று சிங்கப்பூரின் பிரதான மொழிகளிற்கு சம அந்தஸ்து வழங்கி, அனைத்து இனத்தவரையும் பொருளாதார வளர்ச்சி என்ற ஒற்றை இலக்கை நோக்கி லீ நெறிப்படுத்தினார்.



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

தமிழர்களின், குறிப்பாக பிரிட்டிஷார் காலத்தில் சிங்கப்பூரிற்கு அழைத்துவரப்பட்ட, யாழ்ப்பாணத் தமிழர்களின் மூளை வளத்தை, லீயின் சிங்கப்பூர் அரசு நன்றாகவே பயன்படுத்திக் கொண்டது.

2017ல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் “Jaffna holds special significance for Singapore” என்று சொன்னதும், சிங்கப்பூரின் முதலாவது வெளிவிவகார அமைச்சராக (1965 –80) கடமையாற்றிய சின்னத்தம்பி ராஜரத்தினத்தின் குடும்ப இல்லத்திற்கு அவர் சென்றதும், யாழ்ப்பாண தமிழர்கள் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை அந்த நாடு இன்றும் மறவாமல் இருப்பதற்கான அடையாளங்களே.

ஆனால் இலங்கையிலோ, தமிழர்களை அடித்து விரட்டுவதிலே ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினார்கள். தென்னிலங்கையில் கலவரங்களை தூண்டியும், பாரம்பரிய தமிழ் நிலங்களில் அடாத்தாக சிங்களவர்களை குடியேற்றியும், தரப்படுத்தலால் பல்கலைக்கழகங்களில் இருந்தும், சிங்களத்தை கட்டாயமாக்கி அரச சேவையில் இருந்தும் தமிழர்களை சிங்கள அரசாங்கங்கள் அடித்து விரட்டத் தொடங்கின. சிங்களவர்களினம் அடிவாங்கி முதலில் ஓடத் தொடங்கிய தமிழர்கள், பின்னர் நின்று நிதானித்து, ஆயுதம் தூக்கி திருப்ப அடிக்கத் தொடங்கிய வரலாறு தான் தமிழர்களின் ஆயுதப் போராட்டம்.



அதிபர். லீ. குவான்யூ

ஆற்றல் மிகு அந்த தலைமுறைகளின் ஒரு பகுதி, காடுகளில் இருந்து போராடத் தொடங்க, இன்னுமொரு பகுதியினர் வெளிநாடுகளிற்கு புலம்பெயரந்து போராட்டத்திற்கான நிதிவளத்தையும் சர்வதேச ஆதரவையும் சேர்க்கத் தொடங்கினார்கள்.

இன்னுமொரு வளமாக சொல்லப் போனால், அரசியல் ஆதாயத்திற்காக பேரினவாத சிந்தனையை கிளப்பி விட்டு, சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குவதில் மட்டும் கவனம் செலுத்த தொடங்கிய இலங்கை ஆட்சியாளர்களில் நம்பிக்கையிழந்த ஆற்றல்மிகு தமிழ் இளைஞர்கள்,

எங்கட பாட்டை நாங்க பார்க்கிறோம், எங்களை தனிய போக விடுங்கோ, நீங்க எக்கேடாவது கெட்டு போங்கோ என்று தான் தனிநாட்டிற்கான போராட்டத்தை முன்னெடுத்தார்கள் என்று சொல்லலாம்.

அந்த ஆற்றல் மிகு தமிழ் இளைஞர்கள் தங்கள் நோக்கத்தை அன்று அடைந்திருந்தால், இன்று சிறிலங்காவை விட்டு ஓடும் சிங்கள இளைஞர்கள், வவுனியா எல்லையிலோ இல்லை வாழைச்சேனை பாலத்திலோ தமிழீழத்திற்குள் வர விசா கேட்டு கியூவில் நின்றிருப்பார்கள்.

இலங்கையின் இன்றைய பொருளாதார வங்குரோத்து நிலைக்கு அடித்தளமாக இருப்பது அவர்களது பேரினவாத சிந்தனை தான். இதனை சிங்கள சமூகம் உணர்ந்து தன்னைத் தானே திருத்தாத வரை இலங்கைத் தீவு அதளபாதாளத்தை நோக்கி சென்று கொண்டே இருக்கும்.







அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

## யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகை இணைந்து நடத்திய

# கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் மணிவிழா!






















**செய்தி:- கி.த.குகதாஸ் (யேர்மனி)**

கடந்த மாதம் [சனிக்கிழமை] 20.11.21 யேர்மனி சுவெற்றா நகரத்தில். அன்னை ‘சிவத்தமிழ்செல்வி’ தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆரம்பித்த அறப்பணியை ஈழத்தின் சிவபூமி அறக்கட்டளையூடாக பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கும் ‘கலாநிதி’ திரு.ஆறு திருமுருகன் அவர்களின் மணிவிழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. மனிதன் பிறந்தான் வாழ்ந்தான் என்பதற்கு அப்பால்! எப்படி மனிதனாக வாழும்போது வாழவேண்டும் என்பதனை அறப்பணியூடாக உலகத்திற்கு எடுத்துக்காட்டும் பேராசான் ‘செஞ்சொற்செல்வர்’ திருமிகு. ஆறு.திருமுருகனாரை போற்றி மகிழ்ந்த நாளாக அமைந்தமை சிறப்பே.




பி.ப 4.45 மணியளவில் மங்கல விளக்கேற்றல் நிகழ்வினை திரு.திருமதி. சிவவினோபன் தம்பதிகளுடன், ‘ஆன்மீகத்தென்றல்’ திரு.தம்பி.புவேனேந்திரன் அவர்கள் ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள். செல்வி.பாரிஜா இராஜகருணா அவர்களின் தேவாரபதிகத்துடன் ஒரு ஆன்மீகம் கலந்த நிகழ்வாக தொடர்ந்து. தாயகத்தில் விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகளுக்கும், மக்களுக்கும் 2 நிமிட அகவணக்கம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து வெற்றிமணி, சிவத்தமிழ் பிரதம ஆசிரியர். மு.க. சிவகுமாரன் அவர்களின் வரவேற்புரை சிறப்பாக அமைய தொடர்ந்து வாழ்த்துரையினை திரு.நயினைவிஜன், திரு.க.முருகதாசன், திரு.கி.த.குகதாஸ்,திரு.பொ.ஸ்ரீஜீவகன், திரு.வை. சிவராஜா, திரு.வி.சபேசன், திரு.சிவஅருள் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

செல்வன் நகுலதாஸ் சஞ்ஜே பாரதி பாடசாலை.



25 ஆம் பக்கம் பார்க்க...

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com

aaDaa Finance 0798000100

finma : 34598 cicero : 25605



நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# லண்டனில் உலகக் கலைஞர்களுக்கான விருது விழா!





கிரிபின் கல்லூரி சர்வதேச கல்விப் பேரவை நுண்கலைத் தேர்வு ஆணையம் வழங்கிய உலகக் கலைஞர்களுக்கான விருது வழங்கும் விழா 23/10/2021 இலண்டன் மாநகரில மிகச் சிறப்பாக நடைபெற்றது. உலகெங்கும் பரந்து வாழும் கலைஞர்கள் ஒன்றுகூடி தமது கலை விருதுகளை பெற்றுக் கொண்டார்கள்..

இவ்விழாவில் தமது வாழ்நாளில் புரிந்த கலைச் சாதனைகளைப் பாராட்டி வாழ்நாள் சாதனையாளர்களுக்கான 'ஆச்சாரிய கலாசாகர' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அத்தோடு நாட்டிய துறையில் விற்பன்னர்களாக விளங்கும் கலைஞர்களுக்கு கலைச்சேவையை பாராட்டி 'நிர்த்திய சிரோன்மணி' விருது, 'நாட்டிய கலா விபஞ்சி' விருது, என்பவை வழங்கப்பட்டன. இசை,வாத்தியங்களுக்கான விருதாக 'கான கலாதரா' விருது 'வாத்திய கலாதரா' விருது 'சங்கீத இரத்னா' விருது என்னும் விருதுகள் வழங்கி உலக கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஐக்கிய இராச்சிய வாழ் கலைஞர்கள் சேவையைப் பாராட்டி விதுஷி,வித்துவான் விருதாக 'நிருத்திய இரத்னாகர' விருது, மற்றும் 'கந்தர்வ கலா இரத்னா' விருதுகளும் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.



இவ்விழாவில் மருத்துவத் துறை பேராசிரியர் திரு.நிர்மலன் மகேசன் அவர்களும், பேராசிரியை திருமதி நிரோஷினி நிர்மலன் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தார்கள். கிரிபின் கல்லூரியின் நிறுவனர் கலாநிதி திருமதி பத்மா ராகுலன்,இயக்குனர் திரு நாதன் ராகுலன்,இயக்குனர் கவுன்சிலர் திரு பரம் நந்தா, இங்கிலாந்து ஒருங்கிணைப்பாளரும் உலகளாவிய செயற்பாட்டு அதிகாரியுமான திருமதி சுகந்தினி சுதாகரன், உலகலாவிய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் செல்வி சாஸ்கிய யோகராஜா ஆகியோரின் கடின உழைப்பு போற்றுதற்குரியது. அத்தோடு கிரிபின் கல்லூரியின் ஆசிரியர்களும் குறிப்பிடத் தக்க தமிழ் பாடசாலைகளின் ஒத்துழைப்பும் கிரிபின் நலன் விரும்பிகளும் அனைவரும் இணைந்து மிகச் சிறப்பான முறையில் நடத்தியுள்ளார்கள்.





## யேர்மனி குமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் சூரசம்கார நிகழ்வுகள்



ஸ்ரீ குறிஞ்சிக்குமரன் ஆலயம் Gummersbach இல் செவ்வாய்க்கிழமை 09.11.2021 மாலை முருகப்பெருமான் சூரசம்கார நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது. உபயம். திரு. திருமதி. இரவீந்திரன். Bonn குடும்பம்.



படங்கள்: மதன் சிவா





அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகை இணைந்து நடத்திய

# கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் மணிவிழா!


23 ஆம் பக்கத் தொடர்ச்சி...













(காமன்) எசன் தமிழ் கலாச்சார மன்ற தமிழ்ப்பாடசாலை செல்வன். மு.பிரணவன், செல்வி.கே.கேதாரணி ஆகிய மூன்று இளம் சிறார்களின் பேச்சும் அன்னை 'சிவத்தமிழ் செல்வியின்' பணியை முன்நகர்த்தும் திருமிகு. ஆறு.திருமுருகனாரின் நற்பணி பற்றியும் மிகவும் தெளிவாக பேசியமை சபையை அவரின் தொண்டுகள் பற்றி வியக்கவைத்து தம்மையறியாமலே கைகளை தட்டி பாராட்டுக்களுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தமை சிறப்பே.

தொடர்ந்து 'ஈஸ்வரா சலங்கையொலி' மாணவிகளின் நடனம், 'நிருத்திய நாட்டியாலய' மாணவி திருமதி. யாதவி அன்ரனிசுரேஸ்குமார் அவர்களின் நடனம்,'ஆடல்கலாய' மாணவி செல்வி. அபிரா தயாபரன், மற்றும் செல்வன். நிமலன் சத்திய குமார் ஆகியோரின் நடனம் சபையை ஒருகணம் நிசத்தமான ஒரு பொழுதைதாண்டி நாடிநரம்புகளை முறுக்கேறவைத்தமை சிறப்பிலும் சிறப்பே. அத்துடன் அனைத்து நடனங்களும் பக்தி பரவசமூட்டும் பாடலாக அமைந்தமை சிறப்பே. தொடர்ந்து நிகழ்வின் கதாநாயகன் திருமிகு. ஆறு.திருமுருகன் அவர்களின் சேவையை போற்றி. 'சிவத்தமிழ்' சஞ்சிகை சிறப்புமலராக வெளியீடு செய்யப்பட்டது.

நூலின் வெளியீட்டுரையினை திருமதி.நகுலா சிவநாதன் ஒவ்வொரு பக்கங்களையும் சிறப்புச்சேர்ந்த எழுத்தாளர்களையும், நூலின் பக்கங்களிலுள்ள திருமிகு. ஆறு.திருமுருகன் அவர்களின் சேவையும் எடுத்துக் கூறினார். தொடர்ந்து 'சிவத்தமிழ்' சிறப்பிதழினை கம் காமாட்சி அம்பாள் பிரதம குரு சிவஸ்ரீ. ஆறுமுக பாஸ்கரக்குருக்களின் ஆசியுரையுடன் குருக்கள் வெளியீட்டுவைக்க முதல் பிரதியினை திரு.தேசிங்கராஜா அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கனடா சீனியஸ் தாளலயம் நிகழ்வினை திரு. அ.சிவதாசன், திரு.வெ.இரவீந்திரன் ஆகியோர் நகைச்சுவைகலந்த நடன நிகழ்வாக நடாத்தினார்கள். தொடர்ந்து நன்றியுரையினை நிகழ்வின் ஏற்ப்பாட்டாளர் வெற்றிமணி ஆசிரியர் திரு.மு.க. சிவகுமாரன் அவர்கள் நன்றியுடனும், மகிழ்வுடனும் உரையாற்றினார். அனைத்துநிகழ்வுகளையும் மேடையில் அறிவிப்பாளர் 'சகநாயகன்' சக்திவேல் இடைவெளியின்றி நிகழ்வினை கொண்டுசென்றமை சிறப்பே. இராப்போசன உணவுடன் விழா நிறைவுகண்டது. ஒலி அமைப்பினை நல்லமுறையில் சுவெற்ரா கருணாஸ் அமைப்பினர் செய்திருந்தார்கள்.

**படப்பிடிப்பு :-**
**திரு.தம்பி புவனேந்திரன்**
**திரு.ஜெகன் மோகன்**
**திரு.இராஜகருணா ( உலக்கோவில்)**



10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பரதநாட்டிய ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு 2021 யேர்மனி.





திருமதி.சர்மிளா தர்சன் | திருமதி. துர்கா ராமேஸ் | திருமதி. நிவாஷினி வீரேஸ்வரன்

திருமதி. பென்சிகா அல்பேர்ட் டென் பொஸ்கோ, அவர்களும் தேர்வில் கலந்து கொண்டனர். பரத நாட்டிய ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு நடுவர்களாக முதுகலைமானி பவானி சிறீதரன்,முதுகலைமானி நிமலினி ஜெயகுமார்,முனைவர் சந்திரவதனி விஜயசுந்தரம், முனைவர் மதிவதனி சுதாகரன் ஆகியோர் கடைமையாற்றினர்.

16.10.2021 ஆலன் நகரத்தில் நடைபெற்ற தேர்வில் நடன ஆசிரியர் பரதக்கலைவித்தகர் திருமதி. மிதிலா விஜித் அவர்களின் மாணவி திருமதி. சர்மிளா தர்சன் அவர்களும், நாட்டிய முதுகலைமானி திருமதி. அற்புதராணி கிருபராஜ் அவர்களின் மாணவி திருமதி. துர்கா ராமேஸ் அவர்களும், யேர்மன் கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியர் திருமதி வசுந்தரா சிவசோதி (B.A Diploma in Dance) and Education) அவர்களிடமும், நடன ஆசிரியர் பரதக்கலைவித்தகர் திருமதி மிதிலா விஜித் அவர்களிடமும் பயின்ற, மாணவியான திருமதி. நிவாஷினி வீரேஸ்வரன் அவர்களும் தேர்வில் கலந்து கொண்டனர்.மொத்தம்.11 மாணவர்கள் தேர்வில் கலந்து சிறப்பித்தனர்.

---

## நம்பிக்கை தரும் கொரோனா மாத்திரைகள்




15 ஆம் பக்கம் பார்க்க...

தொடங்கிய 5 நாட்களுக்குள் தொற்றை உறுதிசெய்து, இந்த மாத்திரையைக் கொடுத்துவிட வேண்டும். ஒரு வேளைக்கு 800 மி.கி. வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு இதை எடுத்துக்கொள்ள வேண்டும். மருத்துவரின் மேற்பார்வையில், வீட்டில் இருந்துகொண்டே இந்தச் சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்பது மற்றொரு நன்மை.

### பைசர் மாத்திரை

மெர்க் நிறுவனத்தைப் போலவே பைசர் நிறுவனமும் ‘PF-07321332/Ritonavir’ எனும் கொரோனா மாத்திரையைத் தயாரித்துள்ளது. அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து ஒழுங்காற்றுக் கழகத்தின் (FDA) அனுமதிக்காக இந்த நிறுவனம் காத்திருக்கிறது. ‘பேக்ஸ்லோவிட்’ (Paxlovid) எனும் வணிகப் பெயரில் இது சந்தைக்கு வர இருக்கிறது; கரோனா தொற்றை ஆரம்ப நிலையிலேயே தடுத்து, தொற்றாளருக்கு இறப்பு ஏற்படுவதை 89மூ தவிர்த்துவிடும் ஆற்றல் கொண்டது. இதைக் கர்ப்பிணிகளுக்கும் வழங்கலாம் என்பது கூடுதல் நன்மை.

இதுவும் கொரோனா தொற்றின் அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் எடுக்கப்பட வேண்டிய மாத்திரைதான். ஒரு வேளைக்கு 2 மாத்திரைகள் வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு எடுக்கப்பட வேண்டும். இது, கொரோனா வைரஸ் நகலெடுக்கத் தேவையான ‘புரோட்டியேஸ்’ நொதியின் உற்பத்தியைத் தடுத்துவிடுவதால், தொற்றாளரிடம் இதன் எண்ணிக்கை கட்டுப்படுகிறது. தொற்று தீவிரமாவது மட்டுப்படுகிறது.

பக்கவிளைவுகள் அதிகம் இல்லாத இந்த இரண்டு வகை மாத்திரைகள் வழங்கப்படுவது நடைமுறைக்கு வரும்போது, தொற்றாளர்களுக்குச் சளிப் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதும், பரிசோதனைகளை அதிகப்படுத்த வேண்டியதும், அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் உடனே சிகிச்சை பெறவேண்டியதும் முக்கியமாகின்றன. அதற்கு அரசுகளும் சமூகமும் தயாராக வேண்டும் என்கின்றனர் வல்லுநர்கள். இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்.

அடுத்ததாக, தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கொரோனா மாத்திரைகளின் பயன்பாடு அவசரமாகத் தேவைப்படுகிறது எனவும், தடுப்பூசிகள் மிகக் குறைவான அளவில் செலுத்தப்பட்டுள்ள ஏழை மற்றும் நடுத்தர நாடுகளில் கொரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தித் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் வல்லுநர்கள் யோசனை கூறியுள்ளனர்.

ஆக மொத்தத்தில், தடுப்பூசியுடன் இந்த மாத்திரைகளும் பயனுக்கு வந்துவிட்டால், அடுத்தடுத்த கரோனா அலைகள் எத்தனை வந்தாலும், உயிராபத்து இல்லாமல் அவற்றை எதிர்கொள்ள முடியும் எனும் நம்பிக்கை பிறந்துள்ளது.

**நன்றி: ஈழநாடு**

---

## ‘கோடை’ நாடகம்- 1979

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

02-03-1979 அன்று மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் மேடையேறிப் பெரும் பாராட்டைப் பெற்றது. ஒரு பா நாடகத்தில் சிறப்பாக நடித்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 23 வயதில், வளர்ந்த பிள்ளைகளுக்குத் தாயாக நடித்தது எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. பெஞ்சமின் அவர்கள் மிக அழகாக எனக்கு ஒப்பனை செய்திருந்தார்.

இந்த மேடையேற்றத்தைத் தொடர்ந்து ‘கோடை’ நாடகம் இலங்கை வானொலியில் ‘மேடை நாடக’ வரிசையில் முதலாவது நாடகமாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பானது. அப்போது அங்கு நாடகத் தயாரிப்பாளராகப் பணிபுரிந்த கே.எம்.வாசகர் அவர்கள் இதனைத் தயாரித்திருந்தார். மேடை நாடகத்தில் நடித்த நாங்களே வானொலி நாடகத்திலும் நடித்தோம்.

நான் நடித்த ‘கோடை’ நாடகம் ஒரு முறைதான் மேடையேறியது. யாழ். நாடக அரங்கக் கல்லூரியினர் தமது இரண்டாவது நாடகமாக ‘அவள் ஏன் கலங்குகிறாள்’ என்ற நாடகத்தைத் தயாரித்தபோது அந்த நாடகத்திலும் நடிப்பதற்காக மீண்டும் சண்முகலிங்கம் மாஸ்டர் என்னை அணுகினார். அந்த நாடகத்தில் ஒரேயொரு பெண் பாத்திரம். நான் இன்னும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த காலம் அது. எனக்கு நேரம் வராது மாஸ்டர் என்று சொன்னேன். அவர் தங்களுக்கு வேறு பெண் நடிகையை எடுப்பது இயலாத காரியமாக இருக்கிறது என்று என்னை மிகவும் வற்புறுத்திக் கேட்டார். நானும் சரி என்று கூறி அந்த நாடகத்தில் நடித்தேன். ‘அவள் ஏன் கலங்குகிறாள்’ நாடகத்தை வீ.எம்.குகராஜா எழுதித் தானே நெறியாள்கை செய்திருந்தார். பின்னர் நேரமின்மை காரணமாக யாழ். நாடக அரங்கக் கல்லூரி நாடகங்களில் நான் தொடர்ந்து நடிக்கவில்லை.

**(கிடைத்தவர்களது படங்களையாவது ஆவணப்படுத்தும் நோக்கில் பிரசுரித்து உள்ளோம்.-வெற்றிமணி.)**

மிகுதி அடுத்த இதழில்...








அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை!

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இரண்டு வகையான [அதாவது உள்நாட்டு வெளிநாட்டு] வருமானங்களையும் இழந்த ஒரு நிலையை இலங்கை கடந்த காலங்களில் எதிர் கொள்ளவில்லை. இது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாட்டைக் கொண்டு சென்றது. பெருந்தொற்று அதனால் ஏற்பட்ட முடக்கம் என்பன சர்வதேச ரீதியான நெருக்கடியாக இருந்தாலும் கூட, அதற்கு ஈடுகொடுக்கக்கூடிய விதமான உபாயங்கள் எதுவும் இலங்கையிடம் இருக்கவில்லை. வரவு செலவுத் திட்டத்தில் கூட அதனைப்புரிந்துகொள்ள முடிகின்றது.

போர் முடிவடைந்து 12 வருடங்கள் சென்றுள்ள நிலையில்கூட, பாதுகாப்புக்குத்தான் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இது பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கடும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் கூட 15 வீதமான நிதி அதாவது, 373 பில்லியன் ரூபாய் பாதுகாப்புச் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 14 வீத அதிகரிப்பாகும். பாதுகாப்புக்கு இந்தளவு நிதி ஒதுக்கப்பட வேண்டிய தேவை என்ன என்ற கேள்வியை பிரதான சிங்களக் கட்சிகள் கூட எழுப்புவதில்லை. காரணம், பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இதற்கு ஆதரவுள்ளது. நாட்டின் பாதுகாப்பு என்பது சிங்கள பௌத்த தேசியவாதத்துடன் தொடர்புபட்டதாகப் பார்க்கப்படும் நிலை உள்ளதால், இது குறித்த கேள்விகளை எழுப்புவது தமது அரசியலைப் பாதிக்கும் என்பதால் ஜே.வி.பி. உட்பட எந்தவொரு சிங்களக் கட்சியும் இவ்விடயத்தில் மௌனமாகவே இருக்கின்றன. மறுபுறத்தில், ஒதுக்கப்படும் இந்தளவு பாரிய தொகை எங்கே எவ்வாறு செலவிடப்பட்டுள்ளது என்பதற்கும் கணக்குக் காட்டப்படுவதில்லை. அவை 'தேசிய பாதுகாப்பு இரகசியங்கள்' எனக் கருதப்படுவதால் அதனையிட்டும் யாரும் கேள்வி எழுப்புவதில்லை.



கல்வி சுகாதாரம் என்பவற்றுடன் ஒப்பிடும் போது பாதுகாப்புக்கு பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது பொருளாதார நிபுணர்களால் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றது. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளைப் பொறுத்தவரையில் கல்வி, சுகாதாரம் என்பனவே இதிகளவு ஒதுக்கீட்டைப் பெறும் முறைகளாக இருக்கின்றன. ஆனால், இலங்கை அவ்வாறான அணுகுமுறையைக் கையாளாததால், மக்கள் எதிர்பார்த்த நிவாரணங்களை அரசினால் வழங்க முடியாமல் போயுள்ளது.

அதேவேளையில், வெளிநாட்டு வருமானங்களை அதிகளவுக்குப் பெற்றுக் கொள்ளத்தக்கவகையில் ஏற்றுமதிகள், உற்பத்திகள் விரிவாக்கம் செய்யப்படவில்லை. இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிகளான தேயிலை, தெங்கு, றபர், வாசனைத் திரவியங்கள் என்பவற்றுக்கு மேலதிகமாக அண்மைக்காலத்தில் ஆடை ஏற்றுமதிதான் வெளிநாட்டு வருமானததைத் தேடித் தரும் பொருளாக உள்ளது. கொரோனா அதிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கையின் செலவீனங்களுக்கு இவற்றின் மூலமாகக் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை. இதனால், கடன்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

வருமானம் இல்லாததால் கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதிலேயே தடுமாறும் நிலை அரசுக்கு ஏற்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் செலவீனத்தில் சுமார் 50 வீதம் இவ்வாறு கடன்களையும், வட்டியையும் செலுத்துவதற்கே போய்விடுகின்றது. மிகுதியாகவுள்ள 50 வீதத்தில் 30 வீதம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்துக்குத் தேவையாகவுள்ளது. மிகுதி 20 வீதத்தில்தான் அபிவிருத்திகளுக்கு பயன்படுத்த முடியும். இந்த நிலையில் அத்தியவசியத் தேவைகளுக்கே அரசாங்கம் கடன்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது.

இதேவேளையில், தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த மாதம் பல பில்லியன் ரூபாய்கள் அரசாங்கத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இது உற்பத்தியைப் பெருக்காமலே வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அரசின் உபாயமாகும். வரிகளை அதிகரித்து வருமானத்தைப் பெறமுற்படும் போது, மக்களின் அதிருப்தி எதிர்ப்பு வலுவடையும். ஆனால், பணத்தை அச்சிட்டு வருமானத்தைப் பெறும்போது அது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால், இது பாரியளவில் பணவீக்கததை ஏற்படுத்தும். அத்தியவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் இதனால் அதிகரிக்கும். இலங்கையில் இதனை இப்போதே உணர முடிகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், நட்டஈட்டைக்கொடுப்பதன்மூலமாகமட்டும் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாது. அவர்களுடைய உறவுகள் அதனை ஏற்கவும் போவதில்லை. தமக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. ஆக, வெறுமனே சர்வதேச சமூகத்துக்குக் காட்டிக்கொள்வதற்கான ஒரு உபாயமாக மட்டுமே இந்த ஒதுக்கீடு அமையப்போகின்றது.

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து கடந்த சில மாதங்களாகவே போராட்டங்களை நடத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கவும் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால், இந்தளவு பொருளாதார நெருக்கடிக்குள் நாடு உள்ள நிலையில் அதனை படிப்படியாகச் செய்திருப்பதே பொருத்தமானதாக இருந்திருக்கும். அதேவேளையில், இது ஏனைய துறைகளில் உள்ளவர்களையும் போராடத் தூண்டும். ஆக, உள்நாட்டு அரசியல் பிரச்சினை ஒன்றை சமாளிக்க இதனை அரசாங்கம் செய்து புதிய பிரச்சினைக்குள் சிக்கப்போகின்றது.

பஸிலின் பட்ஜட் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கப்போகின்றதா? தீவிரப்படுத்தப்போகின்றதா? பொறுத்திருந்து பார்ப்போம். ■




அனைவருக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

# வெற்றிமணியின் 27 ஆவது நூலாக தாயகத்தில் பொலிகையூர் ரேகாவின் நூல் வெளியீடு










கடந்த மாதம் 21.11.2021 யாழ்ப்பாணம் குரும்பசிட்டி கிராமத்தில் வெற்றிமணி 27 ஆவது வெளியீடாக பொலிகையூர் ரேகா அவர்களின் 'பழந்தமிழ் மகளிரும் வணிக மேலாண்மையும் [சங்க காலம்]' என்ற நூல் வெளியிடப்பட்டது.

2019 ஆண்டு யேர்மனியில் மகளிர் தினத்தில் பொலிகையூர் ரேகா அவர்களின் நினைவுகள் துணையாக எனும் கவிதை தொகுப்பு வெற்றிமணியின் 25 வது நூலாக வெளியீடு கண்டது. தற்போது அவரது இன்னும் ஒரு நூலை மீண்டும் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

விழாவில் பேராசிரியர் சிவலிங்கராஜா, ஆசிரிய ஆலோசகர். தாயக வெற்றிமணி ஆசிரியை வலன்ரீனா இளங்கோவன். பொ. தங்கராசா, மற்றும்,ஆசிரிய ஆலோசகர். தீவக வலயக் கல்வி அலுவலகம். இளங்கோவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிகபீட சிரேஷ்ட்ட விரிவுரை யாளர் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் ஆய்வுரை நடாத்தினார். கனடாவில் இருந்து வருகை தந்த பொறியியலாளர் கணபதிப்பிள்ளை செந்தில் வேலன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

கோரோன கால கட்டுப்பாடு விதிகளுக்கு அமைய 30 பேர் மட்டுமே அனுமதிக்கப் பட்டனர். ■

---

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பட்டினி கிடப்பதுமில்லை. இளமையும் காமமும் இணையப் பெற்றவர் விரும்பும் செல்வம் வேறேதாவது இருக்கிறதா? உயிரோடு உள்ள வரையில் ஒரு கையால் துணைவரைத் தழுவிக்கொண்டு, மற்றொரு கையால் கூறுபட்டுக் கிடக்கும் ஆடையை உடுத்திக்கொள்ளும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. இளமை போய்விட்டால் திரும்ப வராது. எனவே இளமையைப் பாதுகாத்துக் கொள் என்கிறாள்.

பாகுபலி படத்திலே கதாநாயகன்

## அன்று தோய்யில் என வரைந்தது
## இன்று Tattoo கலையாக மாறியுள்ளது

கதாநாயகிக்குத் மயில் இறகால் தொய்யில் வரைவதை அழகாகக் காட்டியுள்ளார்கள். நற்றிணை, கலித்தொகை, மதுரைக்காஞ்சி, சீவகசிந்தாமணி, மேருமந்திரபுராணம், கம்பராமாயணம், அம்பிகாபதிக் கோவை போன்ற பல இலக்கியங்களில் பேசப்பட்ட தொய்யில் கலையானது 15ஆம் நூற்றாண்டிற்குப் பின் அழிந்து போனது. பின் பச்சை குத்துதலாக உருமாறி பின் இன்று Tattoo கலையாக மாறியுள்ளது. ■

---

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

புரிந்துகொள்ளவியலாத குழந்தைகள் சிலர்,எல்லைமீறி சூப்பர் ஹீரோக்களின் மேனரிஸத்தோடு ஒன்றறினைக்கும் போதுதான் பிரச்சினையே எழுகிறது. உதாரணத்திற்கு சூப்பர்

## நிஜவாழ்வில் உங்கள் கதாநாயகன்!

ஹீரோ செய்யும் அசாத்திய விடயங்களை தானும் செய்துபார்க்க முயலுவது அல்லது தன்னை சூப்பர் ஹீரோ காப்பாற்ற வருவார் என்கிற நம்பிக்கையில் ஏடாகூடமாக எதையாவது செய்துவிடுவது போன்ற விடயங்களை தவிர்க்கும் வண்ணமான விழிப்புணர்வுகளை குழந்தைகள் மத்தியில் ஏற்படுத்தும் பொறுப்பு நிச்சயம் பெற்றோர்களுக்கும் உண்டு. 'நிஜவாழ்வில் உங்கள் ஹீரோ தினமும் நீங்கள் காணும் ஒருவரே, அது நீங்களாகவும் இருக்கலாம். எனவே உண்மையான ஹீரோவாக உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள்' எனும் வார்த்தைகள், குழந்தைகளை தன்னம்பிக்கையோடு வழிநடத்தகூடும் . ■

---



இலங்கை வானொலியின் இசைத்தட்டுக் களஞ்சியம் இல்லை என்றால்
## போங்கும் பூம்புனல் எங்கே! நீங்கள் கேட்டவை எங்கே!!

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

கடைசிக் காட்சியில் டைட்டில் ஓடுவதை கவனித்திருக்கிறீர்களா..? [பலர் பார்ப்பதில்லை பஸ் பிடிப்பதற்காக எழுந்து பின் வரிசை பார்வையாளர்களுக்கு உபத்திரவமாக அதிலேயே நின்று பேசிக்கொண்டிருப்பார்கள்] வீட்டில் இருந்த DVD யில் படம் பார்க்கும் போதும் ஏன் எழுந்து ஓட வேண்டும் கோப்பி தயாரித்து குடும்பத்திற்கு பறிமாற வேண்டுமா..?

ஆங்கில பட CLOSING TITLES ,y; GIRL IN RED DRESS> INDIAN MAN IN PUB> POLICE MAN 1> POLICE MAN_2 என்று மிகவும் விளக்கமாகவும் விரிவாகவும் அத்தனை பேரின் பெயர்களையும் படத்தில் சேர்த்திருப்பார்கள் தமிழ்த்திரைப்படங்களில் இந்தப் பழக்கம் கிடையாது. படம் முடியும் முன்னர் மக்கள் பஸ் பிடிக்க ஓடி விடுவார்கள் என்று தெரிந்த காரணத்தினால் தான் என்று நான் நினைக்கிறேன். படத்தின் ஆரம்பத்தில் காட்டப்படும் OPENING TITLES இல் தயாரிப்பாளர் காக்காய் பிடிக்க விரும்பும் வங்கி மனேஜர். பொலிஸ் அதிகாரி, இவர்களோடு படப்பிடிப் பின் போது உணவு வழங்கிய சமையல் நிபுணர்களையும் 'மெஸ்' என்று பெயரில் குறிப்பிட மறக்கமாட்டார்கள். எஞ்சிய பெயர்கள் எல்லாம் ஆபீஸ் நிர்வாகம் என்ற தலைப்பிற்குள் சங்கமமாகிவிடும்.

விக்டோரியா அவர்களை இசைத்தட்டு களஞ்சியத்தில் நான் சந்தித்த வேளையில்,இசைத்தட்டு களஞ்சிய பொறுப்பாளராக திருமதி வில்லியம்ஸ் பணியாற்றினார். விக்டோரியாவோடு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பொறுப்பை [ நான் கூறுவது 1975 காலப்பகுதி] யோகேஸ்வரி கந்த நயினார், மற்றும் வேர்ஜில் பர்னாந்து ஆகியோர் பகிர்ந்து கொண்டார்கள்.

வேர்ஜில் அமரத்துவம் அடைந்து விட்டார். யோகேஸ் இலங்கை வானொலியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்.

இசைத்தட்டு களஞ்சியத்தில் என்னால் மறக்கமுடியாத ஒரு ஊழியர் AARON. சிங்கள இனத்தவர். காலையில் வந்ததும் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள சக்கரங்கள் கொண்ட அலுமாரியை இழுத்துச் சென்று இசைத்தட்டு களஞ்சியத்தில் விட்டு ஒரு நூல் நியைத்தில் CHECK IN செய்வது போல் அந்த இசைத்தட்டுக்களை CHECK IN செய்வார். மாலையில் அவர் வேலை முடிந்து ஐந்து மணிக்கு புறப்பட முன்னர் மறுநாளைக்கு தேவையான இசைத்தட்டுக்களை.CHECK OUT செய்த பின்னர் அலுமாரியை சக்கரங்கள் மூலம் இழுத்துச் சென்று கலையகத்தில் வைத்து விடுவார். என்னுடன் மிக அன்பாகப் பழகிய ஒரு சிங்களத் தாத்தா, இனத்துவேஷம் என்றால் என்ன என்றே அவருக்கு தெரியாது. ■










## வாயை மூடிப் பேசவும்:


# 7 வருடங்களுக்கு முன்பே கோரோனா காலத்தைக் காட்டிய படம்?

நடிகர்கர் துல்கர் சல்மான், அதாவது கேரளா சுப்பர் ஸ்ரார் மம்முட்டியின் மகன்தான் இவர். இவரது முதல் படம் வாயை மூடிப் பேசவும் துல்கர் சல்மான், நஸ்ரியா, பாலாஜி மோகனின் தமிழ் சினிமாவில் இந்தப் படம் கொஞ்சம் புதிய முயற்சிதான். அதிலும் மனிதர்கள், குறிப்பாக உறவுகள் மனம் விட்டுப் பேசினால் எல்லாமே சரியாகிவிடும், என்ற நல்ல விஷயத்தை, ஒரு புதிய கோணத்தில் சொல்ல முயற்சித்திருக்கி றார்கள்.

2014 ஆண்டு வெளிவந்த படத்தை 2021 இறுதியில் விமர்சிப்பதற்கான காரணம். இப் படம் இன்று கோரோனா காலத்தில் எதனைச் சொல்கிறதோ அத்தனையும் 7 வருடங்க ளுக்கு முன்பே சொல்கிறது.

பனிமலை என்றொரு கிராமம். ஹீரோ துல் கர் சல்மான் இங்குதான் வசிக்கிறார். இந்த ஊரில் ஊமைக் காய்ச்சல் என்ற நோய் பரவ, அதில் பாதிக்கப்பட்டவர்கள் பேச்சிழக்கின்ற னர். மக்கள் பேசுவதால்தான் ஊமையாகிறார் கள் என நினைத்து பேசத் தடை விதிக்கிறது அரசு. ஒரு நகரத்தை விட்டு வெளியே செல் லத்தடை. ஒருவர் ஒருவருடன் நேருக்கு நேர் பேசவும் தடை. எச்சில் மூலம் பரவலாம் என்ற பாதுகாப்பு. மருந்து கண்டுபிடிப்பு அதற்கு பக்க விளைவுகள் வரலாம் என்று பயம். வாய்க்கு முகக்கவசம். இப்படி இப்படத்தை சென்ற வாரம் பார்த்தபோது இது 2021 ஒன்றில் வெளி வந்த படமா என எண்ணத்தோன்றியது. அதி கம் கற்பனை பண்ணவேண்டாம். அவை வருங்காலத்தில் நிஜமாகுமோ என்று பயம் வருகிறது.

# மீண்டும் 'மங்காத்தா' சாயல் கதையில் அஜித்



3-வது முறையாக வினோத் இயக்கும் படத்தில் அஜித் குமார் மீண்டும் நடிக்க இருப்ப தாக போனி கபூர் உறுதிபடுத்தி உள்ளார். இந்த படம் மங்காத்தா சாயலில் உருவாக இருப்பதா கவும் இதில் அஜித்குமார் வில்ல னாக நடிக்கிறார் என்றும் தகவல் கசிந்து இணையதளங்களில் பரவி வருகிறது.

எச். வினோத் இயக்கத்தில், அஜித் நடித்த நேர் கொண்ட பார்வை படத்திற்கு ரசிகர் கள் மத்தியில் வர வேற்பு கிடைத்தது. இந்தியில் வெளி யான பிங்க் படத்தின் தமிழ் ரீமேக்காக இது வந்தது. தற்போது மீண் டும் வினோத் இயக்கும் 'வலிமை' படத்தில் அஜித் நடித்து முடித் துள்ளார். அடுத்த ஆண்டு பொங் கலுக்கு வெளியீடு செய்ய முடிவு செய்துள்ளதாக படக்குழு அறி வித்து உள்ளது. வலிமை படம் முடிந்துள்ளதால் அடுத்து அவர் நடிக்க உள்ள புதிய படம் பற்றிய எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவுகிறது.

# கைதி 2 ஆம் பாகத்துக்கு தயாராகும் கார்த்தி



தமிழ் திரையு லகில் முன்னணி நடிகராக வலம் வரும் கார்த்தி, பொன்னியின் செல்வன், விரு மன், சர்தார் போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார். தமி ழில் எந்திரன், விஸ் வரூபம், பில்லா, சாமி, வேலை இல்லா பட்டதாரி, சண்டக் கோழி உள்ளிட்ட பல படங்க ளின் இரண்டாம் பாகங்கள் வந் துள்ளன. சிங்கம், அரண்மனை படங்கள் 3 பாகங்களாக வெளி யாகின. இந்த நிலையில் கார்த் தியின் கைதி படத்தின் இரண் டாம் பாகம் விரைவில் தயாராக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. கைதி படம் 2019-ல் ரிலீசாகி பெரிய வெற்றி பெற் றது. ஜப்பானிலும் வெளியாக இருக் கிறது. இதைய டுத்து கைதி 2-ம் பாகம் எடுக்க வேண்டும் என்று ரசிகர்கள் பல ரும் வலைத்தளத்தில் ஆர் வத்தை பதிவிட்டு வருகிறார் கள். கைதி 2-ம் பாகத்துக்கான பெரும்பகுதி காட்சிகளை முதல் பாகம் எடுக்கும் போதே படமாக்கி விட்டதாகவும், 30 நாட்கள் மட்டுமே படப்பிடிப்பு நடத்த வேண்டியுள்ளது என் றும் லோகேஷ் கனகராஜ் தெரி வித்து இருந்தார். லோகேஷ் கனகராஜ் தற்போது கமல்ஹா சன் நடிக்கும் விக்ரம் படத்தை இயக்கி வருகிறார்.

# அக்கா தயாரிப்பாளர்; தங்கை கதாநாயகி!

கீர்த்தி சுரேசின் அப்பா ஒரு தயாரிப்பாளர் என்பது பெரும் பாலானவர்களுக்கு தெரிந்த தகவல். அவருடைய அக்கா ரேவதியும் தயாரிப்பாளர் என் பது நிறைய தயாரிப்பாளருக்கு தெரியாத தகவல். இவர், ரேவதி 33 படங்களை தயாரித்து இருக் கிறார். அடுத்து தயாரிக்கும் 34 -வது படத்துக்கு 'வாசி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது, கதாநாயகிக்கு முக்கி யத்துவம் உள்ள கதையம்சம் கொண்ட படம். கதாநாயகி, கீர்த்தி சுரேஷ். இவருக்கு ஜோடியாக டொவினோ தாமஸ் நடிக்கிறார். கீர்த்தி சுரேசின் அக்கா ரேவதி தயா ரிக்கிறார்.




Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com


Deutsche Bank
Mehr Wünsche erfüllen.
Möglich mit dem PrivatKredit, der Ihnen finanziellen Spielraum gibt.
#PositiverBeitrag
Jetzt mit 1,75 % effektivem Jahreszins.*
Nettodarlehensbetrag 1.000 EUR
Effektiver Jahreszins* 1,75 %
Fester Sollzinssatz p. a. 1,74 %
Monatliche Rate 84,12 EUR
Laufzeit in Monaten/Anzahl Raten 12
Zu zahlender Gesamtbetrag 1.009,43 EUR
Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.
* Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.
Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
திருமண பட்டுப்புடவைகள் புத்தம்
புதிய டிசைன்களில் மங்கையர் மனங்கவரும்
சேலைகள் சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
குர்த்தாக்கள், இன்னும் இமிற்ரேன் நகைகள் அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்று மகிழ நாடுங்கள்.
என்றும் சிறப்பு விலை
தொடர்பு இலக்கம்: 01731937325
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House'
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
உரிமையாளர்: பா.கணேஷ்
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
SALE
சிறப்பு விலையில் அழகிய சேலைகள்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
taxwing
Steuerberatung & Buchhaltung in Dortmund
உங்களது வரிச்சுமையை குறைத்தல் சம்பந்தப்பட்ட அனைத்து கேள்விகளும்,
ஐயங்களும் நீங்கும் வண்ணம் ஆலோசனைகளை வழங்க
இன்றே எம்மை நாடுங்கள்!
STEUER
Tel.: 0231 108 763 61
0231 584 407 63


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!!! புதிய பொலிவுடன்!!
OPEN
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696 | Fax: 0231/8602698
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்